மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2024 ஜூலை 16-31 தொகுதி 22 இதழ் 21

விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200



# பாசிச எழுச்சியை தடுத்து நிறுத்திய பிரான்ஸ் மக்கள்!

# குத்தகை விவசாயிகளுக்கு அடையாள அட்டை! புதிய குற்றவியல் சட்டங்களை திரும்பப் பெறு!

## சிபிஐஎம்எல் மக்களவை உறுப்பினர் தோழர் சுதாமா பிரசாத் உரை

விவசாயம் வருமானம் ஈட்டக் கூடியதாக இல்லை. பணவீக்கம் மற்றும் இடுபொருள் விலை உயர்வால் விவசாயம் தொடர்ந்து நட்டம் அடைந்து வருகிறது. வருமானத்திற்கு மாற்று ஏற்பாடு உள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முன் வருவதில்லை. அவர்கள் நிலத்தை ஒப்பந்த முறைக்கோ அல்லது குத்தகை முறைக்கோ கொடுத்து விடுகின்றனர். குத்தகை விவசாயிகளே நட்டத்தை சுமக்க வேண்டியவர்களாகிறார்கள். ஆனால் அவர்கள் விவசாயிகளாகவே அங்கீகரிக்கப்படுவதில்லை. விவசாய பட்ஜெட் 1000 கோடியால் அவர்களுக்கு பயன் ஏதுமில்லை. உண்மையில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் எந்த அடையாளமும் அற்றவர்களாகவே உள்ளனர். குத்தகை விவசாயிகளை விவசாயிகள் என அங்கீகரித்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குங்கள் என அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அவர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நலத்திட்ட சலுகைகளை பெற முடியும். அதன் மூலம் விவசாயத்தை தொடர்வதற்கான ஆர்வமும் அவர்களுக்கு உண்டாகும்.

பண மதிப்பிழப்பு துவங்கி மூன்று முறை அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம், வளர்ந்து வரும் ஆன்லைன் வர்த்தகம் ஆகியவை காரணமாக சிறு வணிகர்களின் வியாபாரம் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. சிறு வணிகர்களின் நலனை பாதுகாக்கவும் அவர்கள் தங்கள் முதலீடுகளை நிர்வகிக்கவும் வசதி ஏற்படுத்த வர்த்தக ஆணையம் போன்ற ஒரு அமைப்பு தேவையாக உள்ளது.

குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் மூன்று குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்கள் இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கருத்து சுதந்திரத்திற்கு எதிரானதும் அதை மீறுவதும் ஆகும். இது அரசமைப்புச் சட்ட மீறல் மாத்திரம் அல்ல. இந்தக் குற்றவியல் சட்டங்கள் போலீஸ் ஆட்சியை கொண்டு வருவதற்கான சதியும் ஆகும். இது அவசர நிலை போன்றதொரு சூழலை நிறுவனப்படுத்தும் முயற்சியும் ஆகும்.

அரசாங்கத்துக்கு எதிராக ஒருவர் போராட, கருத்து தெரிவிக்க, உண்ணாநிலை போன்ற போராட்டத்தில் ஈடுபட அரசியலமைப்புச் சட்டம் உரிமை வழங்கி இருக்கிறது. புதிய சட்டப்படி அவை குற்றச் செயல்களாக கருதப்படும். அவர்கள் கிரிமினல் குற்றவாளிகளாக கருதப்பட்டு புதிய குற்றவியல் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள். அது போல, முதல் தகவல் அறிக்கை பதிவது என்பது காவல்துறையின் விருப்பு வெறுப்புக்கு விடப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டவர்களை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கப்பட்ட, அதிகபட்ச 15 நாட்கள் என்பதை 60 இலிருந்து 90 நாட்கள் என்பதாக புதிய சட்டத்தில் மாற்றி இருக்கிறார்கள். அவ்வளவு நீண்ட நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கும் போது போலீஸ் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். அவர்கள் விருப்பம் போல் வாக்குமூலம் பெற முடியும். ஆகவே, இந்தச் சட்டம் மீண்டும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும். மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

# பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை!

## மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி கடும் கண்டனம்! உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடித்து கடும் தண்டனை வழங்க அரசுக்கு வலியுறுத்தல்!

அகில இந்திய கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் அவரது வீட்டுக்கு முன்பாகவே கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அளிக்கிறது. தலித் சமூகத்தின் மத்தியில் செல்வாக்கு பெற்றவர், வழக்கறிஞர், முன்னாள் கவுன்சிலர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளது பல அய்யங்களை எழுப்புகிறது. இது நீண்டநாள் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட படுகொலையாகவே கருத வேண்டியிருக்கிறது. காவல் துறையின் உளவுத்துறைக்கு இது தெரியாமல் போனது எப்படி என்ற கேள்வி எழுகிறது. இதற்கு அரசுதரப்பு தான் விளக்கமளிக்க வேண்டும்.
மேலும் சமீபகாலமாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கொல்லப்படுவதும் கட்சி அலுவலகங்கள் தாக்கப்படுவதும் அடுத்தடுத்து நடந்து வருகின்றன. திரு ஆம்ஸ்ட்ராங் படுகொலையில் தொடர்புடையவர்களை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்துவதோடு கொலைக்கான நோக்கத்தையும் வெளிக் கொண்டுவர வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் கட்சி அலுவலகங்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டியது தமிழ்நாடு அரசின் பொறுப்பு என்பதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) சுட்டிக் காட்டுகிறது.

பழ.ஆசைத்தம்பி,
மாநிலச் செயலாளர்
இகக(மாலெ), தமிழ்நாடு

மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2024 ஜூலை 16 - 31*

தொகுதி 22 இதழ் 21

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

**தலையங்கம்**


# குற்றமும் தண்டனையும்!?

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கூலிப் படையினரால் கடந்த 5.7.2024 அன்று பட்டப்பகலில் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். மறுநாள் காவல்துறையிடம் 8 பேர் சரணடைந்தனர். அதில் ஒருவர் திருவேங்கடம். காவல்துறையின் பாதுகாப்பில் இருந்த, திருவேங்கடம் காவல்துறையுடனான மோதலில் சுட்டுக் கொல்லப்படுகிறார். ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்த இடத்தைக் காண்பிக்கக் கூட்டிச் சென்றபோது, போலீஸாரைத் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றார் என்கிறது போலீஸ். ஆம்ஸ்ட்ராங் கொலையில் திமுக, அதிமுக, பாஜக, தமாக என சகல கட்சிப் பிரமுகர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். திருவேங்கடம் உண்மையான குற்றவாளி இல்லை என்கிறார்கள். அவர் கொல்லப்பட்ட பின்னர் அவர் ஆம்ஸ்ட்ராங் அவர்களை வெட்டும் வீடியோ ஒளிபரப்பப்பட்டது. இவையெல்லாம் பல கேள்விகளை எழுப்புகிறது. தமிழ்நாடு கொலைக்களமாக, ரவுடிகளின் கூலிப்படையினரின் புகலிடமாக மாறிக் கொண்டிருக்கிறதா? அதனால், அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்திட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், கூலிப்படையினர் தனித்து இயங்கவில்லை. அவர்கள் இயக்கப்படுகிறார்கள். அவர்களை போலி மோதலில் கொல்வதன் மூலம் அவர்கள் யாருக்காகச் செயல்பட்டார்களோ அந்த உண்மைக் குற்றவாளிகள் காப்பாற்றப் படுகிறார்கள். குற்றங்கள் குறைய வேண்டும் என்றால், உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். திருவேங்கடம் கொல்லப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு திருச்சியில் துரை என்பவர் போலி மோதலில் கொல்லப்படுகிறார். அவர் மீது 57 வழக்குகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. திருநெல்வேலியில் மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் ரவுடிகளும் கூலிப்படையினரும்தான். அவர்களை ரவுடிகள் என்று சொல்லக் கூடாது என பிரச்சாரம் வேறு. சில ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் இரண்டு பள்ளிக் குழந்தைகளைக் கொன்றவர்களை போலி மோதலில் போலீஸ் சுட்டுக் கொன்றது. அதை பொது மக்கள் வரவேற்ற அந்த பொதுப் புத்தியைச் சாதகமாகக் கொண்டு சட்டத்துக்கு அப்பாற்றபட்ட தண்டனை சரியாகாது. பிழைப்பிற்காக மரம் வெட்டச் சென்ற பழங்குடி மக்களும் ஏதுமறியா இஸ்லாமியர்களும் பல ஆண்டுகளாக விசாரணையே கூட இல்லாமல் சிறையில் வாடும் போது இந்த ரவுடிகள், கூலிப்படையினர் மட்டும் எப்படி சுதந்திரமாகச் சுற்றி வர முடிகிறது? ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கத்தினரின் தயவு இல்லாமல் இது நிச்சயம் சாத்தியமாகாது. ஆணவக் கொலைகள், சாதியாதிக்கக் கொலைகள் எந்த அளவுக்கு நடக்கின்றனவோ அதே அளவு போலி மோதல் கொலைகளும் நடக்கின்றன. கொடூரக் குற்றவாளிகளைத் தண்டிப்பது என்ற பெயரில் சட்டத்திற்குப் புறம்பாகக் கொல்வது மனித உரிமைக்கு

தொடர்ச்சி 6ஆம் பக்கம்...

# போலீஸ் அரசு -

# பாசிச கொடுங்கோல் குற்றவியல் சட்டங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்!




**–ரமேஷ் கணபதி**

### புதிய மொந்தை X நஞ்சு கலந்த பழைய கள்

ஜூன் 25, இந்திய அரசமைப்புச் சட்ட படுகொலை நாள் என்று அறிவித்துள்ளார் மோடி. இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது 1975 ஜூன் 25 அன்று நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட நாள் அது. அந்த நெருக்கடி நிலை காலத்தில்கூட முப்பெரும் குற்றவியல் சட்டங்கள் மாற்றியமைக்கப்படவோ, முற்றிலுமாக மாற்றப்படவோ இல்லை. ஆனால், கடந்த பத்து ஆண்டுகளாக, ஆட்சி நடத்திய மோடி அரசு, ஆங்கிலேயர் ஆட்சி காலத்திய குற்றவியல் சட்டங்களை மாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, அவற்றில் இருந்த 90% பிரிவுகளை அப்படியே வைத்துக் கொண்டு பிரிவுகளின் எண்களை மாற்றியும் தடா, பொடா, உபா போன்ற ஆள் தூக்கி, கருப்புச் சட்டங்களில் இருந்த கொடூரமான பிரிவுகளைச் சேர்த்தும் சட்டங்களுக்கு சமஸ்கிருத உச்சரிப்பில் இந்திப் பெயர்களை வைத்து அவற்றை 2024 ஜூலை 1ம் தேதி முதல் அமல்படுத்தியுள்ளது. இந்திய தண்டனைச் சட்டம் 1860 (Indian Penal Code 1860) பாரதிய நியாய சன்ஹிதா 2023 (Bharathiya Niyaya Sanhita 2023) என்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 (Criminal Proceedure Code 1973) பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023 (Bharathiya Nagarik Suraksha Sanhita 2023) என்றும் இந்திய சாட்சியச் சட்டம் 1872 (Indian Evidence Act 1872) பாரதிய சாக்ஷிய அதிநியம் 2023 (Bharathiya Sakshya Adhiniyam 2023) என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய மொந்தையில் நஞ்சு கலந்த பழைய கள். 2023ஆம் ஆண்டு டிசம்பர் 20, 21 தேதிகளில் இந்தச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் எந்தவித விவாதமும் நடத்தப்படாமல், எதிர்க் கட்சி உறுப்பினர்களை வெளியே அனுப்பிவிட்டு மோசடியாக, நிறைவேற்றப்பட்டன. புதிய சட்டங்கள் பற்றிய ஆய்வோ, விவாதமோ, கருத்துக் கேட்போ நடத்தப்படவில்லை. வழக்கறிஞர்களிடமும் கருத்துகள் கேட்கப்படவில்லை.

### தண்டனை X நீதி

இந்திய தண்டனைச் சட்டத்தை, பாரதிய நியாய சன்ஹிதா அதாவது நீதிச் சட்டம் என்று பொருளாம். அதில் நீதியை விட எளிய மக்களுக்கு எதிரான அநீதிதான் அதிகம் உள்ளது. புதிய சட்டப்பிரிவு 113 ன் படி தேசப் பாதுகாப்பு, இறையாளுமை, தேச ஒற்றுமை என்ற பெயரில் போலீஸ் நினைத்தால் யாரையும் “பயங்கரவாதி” என முத்திரை குத்திட வழி செய்துள்ளது. பிஎன்எஸ் பிரிவு 187 ஒருவரை போலீஸ் காவலில் பகுதி பகுதியாக 90 நாட்கள் வரை வைத்திருக்க வகை செய்துள்ளது. குற்றவாளிகளுக்குத் தண்டனையாக ‘சமுதாய சேவை’ சேர்க்கப்பட்டுள்ளது. எது சமுதாய சேவை? விளக்கம் இல்லை. மூன்றாம் பாலினத்தை பிஎன்எஸ் பிரிவு 8ல் சேர்த்துள்ளதாகப் பேசுகிறார்கள். ஆனால், அவர்களின் உரிமைகள் பற்றி ஒரு வார்த்தை இல்லை. பிரிவு 111ல் அமைப்பாக்கப்பட்ட குற்றம் (Organised Crime) என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் மூலம் யாரை வேண்டுமானாலும் போலீஸ் குற்ற வளையத்திற்குள் சேர்த்துவிடலாம். அரசின் கொள்கைகளை, கார்ப்பரேட் கொள்ளைகளை எதிர்த்து, சுற்றுச் சூழலைப் பாதுகாக்க, மொழி, மாநில உரிமைக்காக என எதற்கும் யாரும் போராட முடியாது. வாய் திறந்து பேசக் கூட முடியாது, அப்படி பேசினால் அது தீவிரவாதச்

செயல் ஆகும். பிணையில் வரமுடியாத சிறைதான். வழக்கறிஞரிடம் பேசியிருந்தாலும் அவரையும் குற்ற வளையத்திற்குள் கொண்டு வருவதற்கு சட்டம் வழிவகுக்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தில் தேசத் துரோகக் குற்றம் என பிரிவு 124(A) என இருந்ததை நீக்கி விட்டதாகப் பெருமையாகச் சொல்லும் மோடி-ஷா கூட்டத்தினர், பிரிவு 124(A) நீக்கிவிட்டதாகச் சொல்லிவிட்டு அதற்குப் பதிலாக இன்னும் கொடூரமான பிரிவு 152 (துரோகம்)ஐக் கொண்டு வந்துள்ளது.

காவல்துறையினரிடம் எதிர்த்து கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால் குற்றம். போலீஸ் சொல்லும் எந்தவொரு செயலையும் செய்ய மறுத்தாலே சிறை நிச்சயம். வழக்கறிஞர்கள் கூட காவல் நிலையத்தில் போய் இனி பேச முடியாது. பிரிவு 226ன் படி உண்ணாவிரதம் இருந்தாலே தண்டனை வழங்கி சிறையில் அடைக்கலாம். அற வழியில் கூட யாரும் போராட முடியாது.

### நடைமுறை x பாதுகாப்பு

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை, குடி மக்கள் பாதுகாப்புச் சட்டம் என்று பொது மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வழக்குகளுக்கான நடைமுறைகள் தொடர்பான சட்டத்தை சில பிரிவுகளை மட்டும் மாற்றிவிட்டு, அர்த்தமே இல்லாமல் மக்கள் பாதுகாப்புச் சட்டம் என்று வைத்துள்ளார்கள். பழைய கு.ந.ச சட்டப்படி குற்றம் சுமத்தப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் காணாமல் போய்விட்டால், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்வரை சாட்சிகளை விசாரணை செய்ய முடியாது, வழக்கு நடக்காது. ஆனால், தற்போது புதிய சட்டப் பிரிவு 335ன் படி குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜராகவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரித்து தீர்ப்பே கொடுத்துவிடலாம். இது காவல்துறை தனக்கு வேண்டியவர்களை நீதிமன்றத்திற்கே வரவிடாமல் வைத்துக் கொண்டு சாட்சிகளை விசாரித்து சாதகத் தீர்ப்பு பெற்று விடலாம். வேண்டாதவர்களுக்கு தண்டனையும் பெற்றுக் கொடுத்துவிடலாம். பிரிவு 15ன் கீழ் அரசு நினைத்தால் காவல்துறை கண்காணிப்பாளரை (SP) சிறப்பு நிர்வாக நடுவராக நியமிக்கலாம். அரசமைப்புச் சட்டம் உறுப்பு 50 நிர்வாகத் துறையையும் நீதித்துறையையும் பிரிக்க வேண்டும் என்கிறது. ஆனால், இச் சட்டத்தின் மூலம் நீதித்துறைக்கான அதிகாரத்தைப் பறித்து காவல்துறையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டவர் இல்லாமல் விசாரணை என்பது நீதிமன்றத்தின் மாண்பை, அதிகாரத்தைக் குறைக்கும் செயலாகும். குற்றவாளிகளுக்கு கைவிலங்கு போடக் கூடாது, அது மனித உரிமை மீறல் என்கிறது உச்சநீதிமன்றம். புதிய சட்டப் பிரிவு 43(3) போலீஸ் யாருக்கும் கைவிலங்கு போட்டு அழைத்துச் செல்ல அதிகாரம் வழங்கியுள்ளது. ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலே அவரைக் குற்றவாளி என போலீஸ் அறிவித்து அவரது புகைப்படத்தை விளம்பரப்படுத்தமுடியும். புகார் வாங்கி 24 மணி நேரத்திற்குள் முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டும் என்று இருக்கும் போதே எப்ஐஆர் போட மறுக்கும் போலீஸிற்கு 14 நாட்கள் வைத்திருந்து விசாரணை நடத்திய பின்னர் முதல் தகவல் அறிக்கை போட்டால் போதும் என்கிறது புதிய சட்டம். தவிர்க்க முடியாத சூழலில் தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்த மாவட்ட ஆட்சியர் உத்தரவு வேண்டும் என்றிருந்ததை, புதிய சட்டம் பிரிவு 349ன் படி வட்டாட்சியரே உத்தரவு கொடுக்கலாம் என்று மாற்றியுள்ளது.

பிரிவு 170, 173 ஜீரோ எப்ஐஆர் என்ற பெயரில் நாட்டில் எந்தவொரு காவல்நிலையத்திலும் புகார் அளிக்கலாம் என்று மாற்றியுள்ளதன் மூலம் சங்கிகள் தங்கள் எதிரிகள் மீது இஷ்டத்திற்கு புகார் அளிக்க வழிவகை செய்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களை ரிமாண்ட்டில் வைக்க, பிணையில் விட போலீஸே முடிவு செய்யலாம். இனி நீதிமன்றம் தேவையில்லை. பிரிவு 349படி கைது செய்யப்படாத நிலையிலும் எவரிடமிருந்தும் கையெழுத்து, கைரேகை, குரல் மாதிரி ஆகியவற்றைப் பெற முடியும். 90 நாட்களுக்குப் பின்னரும்கூட போலீஸ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்குகிறது பிரிவு 193. இதன்மூலம் 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சட்டப்படியாக பிணையில் வரும் வாய்ப்பு மறுக்கப்பட்டுவிட்டது. நீதிமன்றத்தின் அதிகாரமும் பறிக்கப்பட்டுவிட்டது. இனி வீடியோ கான்பரன்ஸ் மூலம் குறுக்கு விசாரணை நடத்தலாம். இதனால் சாட்சிக்கு போலீஸ் மறைமுகமாக சொல்லிக் கொடுக்கலாம்.

### சாட்சியம்

புதிய சாட்சிய சட்டப் பிரிவு 115, குற்றம் சுமத்தப்பட்டவர் மீதான குற்றத்தை அரசுதரப்புதான், காவல்துறைதான் நிரூபிக்க வேண்டும் என்று இருந்ததை இப்போது மாற்றி விட்டது. போலீஸ் எவர் மீதும் குற்றம் சுமத்தலாம். குற்றம் சுமத்தப்பட்டவர்தான் தான் குற்றவாளி இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்கிறது. பிரிவு 22 காவல்நிலைய உதவி ஆய்வாளர், காவலருக்கு குற்றவாளியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு அதிகாரம் அளித்துள்ளது. இதன் மூலம் நீதித்துறை நடுவரின் அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது மட்டுமின்றி, போலீஸிற்கு கட்டுப்பாடில்லா அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எலக்ட்ரானிக், டிஜிட்டல் முறையில் சாட்சியம் அளிக்கலாம். இந்த சாட்சி ஆவணங்களுக்கு கணினி இயக்கத் தெரிந்தவர்கள் கூட சான்று அளிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொழில் நுட்ப வல்லுநர்கள் அல்லாதவர்கள் வழங்கும் சான்றாவணங்களை முதல் நிலை சாட்சியங்களாக ஏற்றுக் கொள்ளலாம் என்கிறது. மோசடி ஆவணங்களுக்கு இனி பஞ்சமிருக்காது.

### மாநில உரிமைகள், மொழி, உரிமைகள் பறிப்பு

பல மொழிகள் பேசக்கூடிய நம் நாட்டில் ஆங்கிலத்தில்தான் சட்டங்கள் இருக்க வேண்டும் என்று இந்திய அரசமைப்புச் சட்டம் உறுப்பு 348 சொல்கிறது. இதுபற்றி கேட்கும் போது சொலிசிட்டர் ஜெனரல், சட்டங்களில் பெயர்களை மாற்றியிருந்தாலும் அவை ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டுள்ளது என்கிறார். ‘சன்ஹிதா’ என்று ஆங்கிலத்திலோ, தமிழிலோ எழுதிவிட்டால் அது இந்தி ஆகாது என்கிறார். கும்பல் கொலை பற்றி பிரிவு 103(2) வரையறுக்கிறது. இதில் மதம் என்கிற வார்த்தை தவிர்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இந்துத்துவக் கும்பல்களின் வன்முறைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 69ன் மூலம் லவ் ஜிகாத்தை சங்கிகள் நடைமுறைப்படுத்த முடியும்.

ஒட்டு மொத்தத்தில் இந்த புதிய முப்பெரும் சட்டங்கள் போலீஸ் ஆட்சிக்கானது. இந்தச் சட்டங்களுக்கு எதிராக வழக்கறிஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினர்களும் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழ்நாடு அரசு நீதிபதி சத்யநாராயணா தலைமையில் ஆணையம் ஒன்றை நியமித்து, புதிய சட்டங்களில் திருத்தம் செய்வது பற்றி கருத்து வழங்கக் கேட்டுள்ளது. புதிய சட்டங்கள் முற்றிலுமாக ரத்து செய்யப்பட வேண்டுமேயொழிய அதில் மாற்றங்கள் செய்வது என்பது நிலைமயை இன்னும் மோசமாக்கும். ஒருவரைக் காலி செய்ய வேண்டும் என்றால் அவர் தலையில் கல்லைப் போடு, ஒரு பிரச்சனையைக் காலி செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஒரு கமிஷன் போடு என்று கலைஞர் சொல்வார். ஏற்கனவே இருந்த சட்டங்களிலேயே மக்களுக்குச் சாதகமான மாற்றங்கள் பல செய்ய வேண்டிய நிலையில், அதை மாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு பாசிச பாஜக மிகவும் கொடூரமான ஆள்தூக்கி அடக்குமுறைச் சட்டங்களை அமல்படுத்தியுள்ளது. இது ஏதோ வழக்கறிஞர்கள் தொடர்பானது அல்ல. மக்களுக்கு எதிரானது ஆகும். ஜனநாயகத்தை, குடியுரிமையைப் பறிக்கும் சட்டங்கள் ஆகும். காலனிய காலத்தை விடக் கொடூரமான இச்சட்டங்கள் முற்றிலுமாக திரும்பப் பெறப்பட வேண்டும்.



எதிரானது; உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டது. மோடி அரசு, போலீஸிற்கு கட்டுப்பாடில்லா அதிகாரம் வழங்கும் கொடூர குற்றவியல் சட்டங்களை அமல்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இச் சட்டங்கள் போலி மோதல்களையும் காவல் கொட்டடிக் கொலைகளையும் இன்னும் அதிகரிக்கும். அச் சட்டங்களை அமல்படுத்திடுவதை நிறுத்தி வைக்குமாறு முதலமைச்சர் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். நல்லது. அக் கொடூரச் சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரி நாடெங்கும் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் நிலையில், இதுபோன்ற போலி மோதல்கள் போலீஸ் ஆட்சிக்கான அறிகுறி இல்லையா? ஏற்கனவே தூத்துக்குடியும் சாத்தான் குளமும் நீதிமன்றங்களை அதிர வைத்துள்ளன. ஆம்ஸ்ட்ராங் கொலையில் உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். திருவேங்கடம் உள்ளிட்ட மோதல் கொலைகளுக்கு சட்டப்படியான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆம்ஸ்ட்ராங் கொலையிலும் திருவேங்கடம் கொலையிலும் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி, குற்றத்தைத் தடுக்கவே போலீசுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறது. குற்றம் செய்வதற்கு அல்ல! குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதே போலீசின் வேலை. தண்டனை வழங்குவது நீதிமன்றத்தின் பொறுப்பு!

### அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) எடுத்த முயற்சிகள்

இந்தக் கருப்புச் சட்டங்கள் மசோதாவாக வரும்போதே அவற்றினை எதிர்த்து அரசுக்கும் பார் கவுன்சிலுக்கும் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் சார்பாக மனு அளிக்கப்பட்டது. நாடு முழுவதும் எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டிலும் பார் கவுன்சில் தலைவரிடம் சங்கத்தின் மத்தியக்குழு உறுப்பினர் அதியமான் தலைமையில் மனு அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் 1.7.2024 முதல் அமல்படுத்தக் கூடாது என மற்ற சங்கங்களுடன் இணைந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் இச் சட்டங்களுக்கு எதிராக வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டுக் குழு(JAAC) நடத்திய பொதுக்குழுவில் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் சார்பாக தோழர்கள் கலந்து கொண்டனர். சிபிஐஎம்எல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து இச் சட்டங்களை ரத்து செய்ய கடிதம் அளித்துள்ளனர். (JAAC) அமைப்பு நடத்திய திருச்சி வழக்கறிஞர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். கர்நாடகா மாநில சட்ட அமைச்சரை சந்தித்து மனு கொடுக்கப்பட்டது. 25.7.2024 ல் திண்டுக்கல்லில் கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. 29.7.2024ல் டெல்லியில் நடக்கும் பேரணிக்கும் AILAJ முழு ஆதரவினை தெரிவித்துள்ளது.

# திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டுகளும், இடது ஜனநாயக மாற்றின் தேவையும்!


மு. இராமச்சந்திரன்

“தலை சிறந்த மூன்றாண்டு; தலை நிமிர்ந்த தமிழ்நாடு! இது சொல்லாட்சி அல்ல; செயலாட்சி!” என்று முதல்வர் பெருமை பேசுகிறார். ஒருவேளை எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியோடு, கடந்த கால ஜெயலலிதா, எம்.ஜி.ஆர் ஆட்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அவர் பேசியிருக்கக் கூடும்; அல்லது அவரின் முன்னவர்களான அண்ணா, கருணாநிதி ஆட்சியைப் போல சில முற்போக்கான முதலாளித்துவ சீர்திருத்தங்களை, சேம நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதற்காக பெருமைப்பட்டிருக்கலாம். ஆனால் மக்களின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், தேவைகளின் அடிப்படையில் பார்த்தால் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், தோழி விடுதித் திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் என பெண்களுக்கான நலத் திட்டங்களை வரிசையாக அடுக்குகிறார்கள். சரிதான்.

கிராமப்புரங்களில் பெண்கள் பெருமளவில் வேலை செய்யும் ஊரக (குடும்பத்திற்கு நூறு நாள்) வேலைத் திட்டத்தில், (நபருக்கு) 200 நாட்கள் வேலை, ₹600 கூலி என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டுவருகிறது. திமுக, தேர்தலில் கொடுத்த வாக்குறுதியான (குடும்பத்திற்கு) 150 நாட்கள் வேலை என்பதைக் கூட இன்னும் நிறைவேற்றத் தயாராக இல்லை. ₹600 கூலி என்பதை திமுக கருத்தளவில் கூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ₹300 கூலி என்பதுதான் திமுகவின் தேர்தல் வாக்குறுதி. உடல் உழைப்பு பற்றிய இழிவான சநாதனப் பார்வையும், குலக்குகளின் (கிராமப்புர முதலாளிகளின்) நலனும்தான் இதில் வெளிப்படுகிறது. இந்தப் பார்வையைக் கைவிடாமல், இந்த நிலையை மாற்றாமல் டெங்கு, மலேரியாவைப் போல, சநாதனத்தை ஒழித்துக்கட்டுவது எப்படி? என்ற ரகசியத்தை உதயநிதி தான் நமக்குச் சொல்ல வேண்டும்.

நகர்ப்புரங்களில் வேலை செய்யும் அமைப்புசாரா பெண் தொழிலாளர்கள், கடும் உழைப்புச் சுரண்டலுக்கும், பாலியல் வன்கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இதைத் தடுக்க வலுவான தொழிலாளர் நலச் சட்டங்களும் இல்லை. இருக்கிற சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை; அல்லது முதலாளிகள் விருப்பப்படி திருத்தப்படுகின்றன. 90% பெண்களாக உள்ள ஆயத்த ஆடை தொழிலாளர்களுக்கு, தொடக்கத்தில் அகவிலைப்படி ₹8130 என இந்த அரசு அறிவித்துவிட்டு, அதை உச்சநீதிமன்றத்திலும் தாக்கல் செய்துவிட்டு, இப்போது இறுதியாக ₹4070 என பாதியாகக் குறைத்திருக்கிறது. “சொல்வதைச் செய்வோம்” என்ற திமுகவின் முழக்கத்திற்கு முன்னால் “முதலாளிகள்” என்ற சொல் ஒளிந்திருக்கிறது என்பதற்கு இது ஓர்




எடுத்துக்காட்டு.

பெண்கள் தங்கள் வாழ்க்கை இணையரை, சாதி, மதம் கடந்து சுதந்திரமாகத் தாங்களே தேர்வு செய்துகொள்ளும்போது ஆணாதிக்க, சாதி, மதவெறி சக்திகள் ஆணவப் படுகொலைகளை நடத்துகின்றன. இதைத் தடுக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும் என மிக நீண்ட காலமாக கோரிக்கை எழுப்பப்பட்டுவருகிறது. பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக, அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்த திராவிட மாடல் அரசு, பெரியார், அம்பேத்கர் கருத்துகளை மக்களிடையே எடுத்துச் செல்ல, கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து நூல்கள் வெளியிடத் தயாராக இருக்கும் ஓர் அரசு, பெரியார், அம்பேத்கர் லட்சியக்

கனவை நிறைவேற்ற உறுதுணையாக இருக்கும் ஒரு சட்டத்தை நிறைவேற்றத் தயங்குவது ஏன்? தங்கள் சுரண்டல் நலனுக்காக, ஆணாதிக்க சாதியக் கட்டமைப்பை பாதுகாக்க விரும்பும் பிற்படுத்தப்பட்ட இடைநிலைச் சாதிகளிலிருந்து எழுந்து வந்திருக்கிற குலக்குகள் நலன்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிப்பதாலா?

ஈடில்லா ஆட்சி, இரண்டாண்டு ஆட்சி" நடைபெற்ற காலத்தில்தான் தமிழ்நாட்டை வெட்கித் தலை குனிய வைக்கும் வேங்கை வயல் கொடிய நிகழ்வு நடந்தது.

குற்றம் நடைபெற்று ஒன்றரை ஆண்டுகள் கடந்தும், இந்த அரசால் இன்னும் குற்றவாளிகளைக் கண்டறிய முடியவில்லை. ஒருவேளை விரும்பவில்லையோ? தலித் வன்கொடுமை வழக்குகளிலோ, பாலியல் வன்கொடுமை வழக்குகளிலோ குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என்பதே விதியாக இருக்கிறது. விதிவிலக்காக சில குற்றங்களில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் இடது, ஜனநாயக அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்களின் விடாப்பிடியான போராட்டங்கள்தான் முக்கிய காரணமே தவிர அரசின் பாத்திரம் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. மரக்காணம், மதுராந்தகம் நச்சு சாராய சாவிலிருந்துதான் திராவிட மாடலின் தலைசிறந்த மூன்றாண்டு துவங்கியது. நான்காம் ஆண்டு இன்னும் கொடிய கருணாபுரம் நச்சு சாராய சாவுகளுடன் துவங்குகிறது.

2021 சட்டமன்றத் தேர்தலில் மதுவிலக்கை படிப்படியாக நடைமுறைப்படுத்த திமுக வாக்குறுதி தந்திருக்கிறது. ஆனால், டாஸ்மாக் வருமானத்தைப் பெருக்குவதில் முனைப்பாக இருக்கிறதே தவிர மக்கள் இயக்கங்கள், குறிப்பாக பெண்கள் பெரிதும் எதிர்பார்க்கும் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதில் இல்லை.

காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், தவப்புதல்வன் திட்டம் என மாணவர்களுக்கான நலத் திட்டங்கள் வரிசையாக பட்டியலிடப்படுகிறது. வரவேற்கத் தக்கவைதான். ஆனால் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகள் வரை பல்லாயிரக்கணக்கில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. உள்கட்டமைப்பு வசதிகளும் போதுமானதாக இல்லை. கல்விக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்து இந்தப் பிரச்சனைகளையெல்லாம் சரி செய்து, கல்விச் சூழல் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும். அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை என்பதுதான் திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கம் என்று சொல்லிக்கொண்டாலும், தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி என்பது அடிப்படை உரிமையாகவோ, கட்டணமில்லாக் கல்வி என்பதாகவோ இல்லை. ஒன்றிய அரசின், எளிய வீட்டுப் பிள்ளைகளுக்கு கல்வியை மறுக்கிற, குலக்கல்வியைத் திணிக்கிற, கார்ப்பரேட் ஆதரவு, பிற்போக்கு தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தமிழ்நாட்டுக்கு தனித்துவமான கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பும் இன்னும் கைகூடவில்லை. மாறாக இந்த முயற்சியில் பின்னடைவுதான் ஏற்பட்டிருக்கிறது.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்பதைப் பொறுத்தவரை 3.5 லட்சம் அரசு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும், கூடுதலாக 2 லட்சம் பணியிடங்கள் உருவாக்கப்படும், ஆக மொத்தம் 5.5 லட்சம் அரசு வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்று திமுக தேர்தலில் வாக்குறுதியளித்திருந்தது.

நடப்பு சட்டமன்றக் கூட்டத்தில் விதி 110-ன் கீழ் முதல்வர் அளித்த அறிக்கையில் கடந்த மூன்றாண்டுகளில் 65,483 இளைஞர்களுக்கு அரசு வேலைகள் வழங்கப்பட்டதாகவும், எதிர்வரும் இரண்டாண்டுகளில் இன்னும் கூடுதலாக 76,803 அரசு வேலைகள் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 1,42,286 பணியிடங்கள்தான் நிரப்பப்படும். ஆக 2 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாது. 2 லட்சம் புதிய அரசு பணியிடங்களும் உருவாக்கப்படாது;

எனில் ஆண்டுக்கு 10 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் என்ற வாக்குறுதியின் நிலையை ஊகிப்பதில் சிரமம் ஏதும் இருக்காது.

விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் வகையில், விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் விளைநிலங்கள் வேறு பயன்பாட்டுக்கு மாற்றுவதைத் தடுத்திட நடவடிக்கைகள் மேற்கொண்டு விளைநிலங்கள் பாதுகாக்கப்படும் என்று விவசாயிகளுக்கு தந்த வாக்குறுதிக்குத் துரோகம் இழைக்கும் வகையில் நேரெதிராக தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம் - 2023ஐ கொண்டுவந்திருக்கிறது.

வீட்டுமனை, வீடு, பொதுப் பயன்பாட்டுக்கான நிலம் என்பது கிராமப்புர, நகர்ப்புர வறியவர்களின் உயிராதாரமான பிரச்சனையாக இருக்கிறது. மக்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்த வகையில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக, வாழ்விடங்களிலிருந்து மக்களைக் கண்மூடித்தனமாக வெளியேற்றுவதன் மூலம் பிரச்சனையை மேலும் பெரிதாக்குகிறது அரசு.

தொடர்ச்சி அடுத்த இதழில்

# சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடி பகுதி 1

*(2023 பிப்ரவரி 16-20ல் பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)*

1. புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதால் அதிகரித்த அளவில் பசுமை இல்லவாயு உமிழ்வுகள், புவி வெப்பமயமாதல், இதுபோன்ற இன்னும் பல விளைவுகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிற, உலகளாவிய சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடிக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருகிறோம். தீவிரமான காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட பேரழிவுகளான இயற்கை வளங்களையும், பல்லுயிர்ச்சூழலையும் நாசமாக்குவது, அதீத மாசுபாடு, கழிவுகளை கட்டற்று கொட்டிக் குவிப்பது, காலநிலை இடர்கள் உள்ளிட்டவற்றை நேரில் கண்டு வருகிறோம். அடிப்படை வளங்கள் மீதான மக்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன; ஆனால் அவற்றிலிருந்து பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பெருத்த இலாபம் சம்பாதிக்கின்றன. இந்த உலகம், 19ஆம் நூற்றாண்டை விட கிட்டத்தட்ட 1.1°செ அதிக வெப்பமாகியுள்ளது. மேலும், வளிமண்டலத்தில் உள்ள கரியமலவாயுவின் அளவு 50% வரை அதிகரித்துள்ளது. தொழிற்துறைக்கு முந்தைய (1850-1900) காலத்தைவிட புவி மேற்பரப்பு வெப்பநிலை 1.04°செ அதிகமாகி, 2021ம் ஆண்டு ஆறாவது அதீத வெப்ப ஆண்டாக பதிவாகியுள்ளது. தற்போது புவி வெப்பநிலை ஒவ்வொரு பத்தாண்டுக்கும் 0.2°செ (±0.1°செ) அதிகரிக்கிறது என்பதை கவனத்தில் கொண்டால், மானுடத்தால் தூண்டப்பட்ட இந்த வெப்பமயமாதல், தொழிற்துறை காலத்திற்கு முந்தைய அளவை விட, 2017ம் ஆண்டில் 1°செ அதிகரிப்பை எட்டிவிட்டது; வெப்பமயமாதலின் இந்த வேகம் தொடர்ந்தால் 2040 இல் 1.5°செ அளவை அடைந்துவிடும்.

2. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை, வெறுமனே புவி வெப்பநிலை அதிகரிப்பு என்பதாக மட்டுமே சுருக்கி விடக்கூடாது. நமது விவசாயம், மீன் வளம், இயற்கை வளங்கள், உணவுப் பாதுகாப்பு, ஆறுகள், உயிர்கள், வாழ்வாதாரம், ஆகியவற்றை தீவிரமாக இடையூறு செய்வதன் மூலம், மனித வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் அது பாதிக்கத் தொடங்கிவிட்டது. விட்டு விட்டு ஓயாமல் பெய்கின்ற பருவமழைகள், மழையின்மை, கடும் பனிப்பொழிவுகள் அல்லது அடிக்கடி நிகழும் இயற்கைப் பேரிடர்கள் ஆகியவை தற்போது பொதுவான நிகழ்வுகளாகிவிட்டன. சமீபத்தில் சீனா, பாகிஸ்தானிலும், வேறு பல இடங்களிலும் கண்டது போல, சில பகுதிகளில், நீர்ச்சுழற்சி இடையூறு, கடும் மழைப்பொழிவு, வரலாறு காணாத வெள்ளத்திற்கு காரணமாகிறது. பேரழிவை உண்டுபண்ணும் வெப்பமாதல், பாழ்படுத்தும் வெப்ப அலைகள், மோசமான வறட்சி, வன அழிப்பு, கடல் மட்டம் உயருதல், கடற்கரைகள் அரிக்கப்படுதல், உயிரினங்களின் ஒட்டுமொத்த அழிவு, ஆகியவை இதன் மற்ற சில வெளிப்பாடுகளாகும். கடந்த கோடையின் போது அய்ரோப்பாவில் கண்டது போல, அதீத வெப்பநிலை காட்டுத்தீயின் அபாயத்தை மேலும் அதிகரிக்கிறது. வெப்பமயமாதல் அதிகரிப்பதால், வேளாண் நிலங்கள் பாலைவனங்களாக மாறிவிடுவதால், சில பிராந்தியங்கள் வாழத் தகுதியற்றவையாக மாறிவிடும். காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான குழுவின் அறிக்கைபடி, புவி வெப்பநிலை அதிகரிப்பு 1.5°செ- அளவுக்கு கட்டுக்குள் வைக்கப்படவில்லை என்றால் அய்க்கிய முடியரசும் அய்ரோப்பாவும் அதீத மழைப்பொழிவினால் உண்டாகும் வெள்ளத்தால் பாதிக்கப்படும்; மத்திய கிழக்கில் உள்ள நாடுகள் அதீத வெப்ப அலைகளையும், பரவலான வறட்சியையும் எதிர்கொள்ளும்; பசிபிக் பகுதியிலுள்ள தீவு நாடுகள், கடல் மட்ட உயர்வால் மூழ்கிவிடும்; பல ஆப்பிரிக்க நாடுகள் வறட்சி, உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. மேலும், ஆஸ்திரேலியா, அதிதீவிர வெப்பத்தாலும், காட்டுத்தீயினால் உண்டாகும் இறப்புகளாலும் பாதிக்கப்படும் வாய்ப்பும் உள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் அடிக்கடி நிகழும் வெள்ளத்தால் உள்கட்டமைப்புகளும் குடியிருப்புகளும் பாதிக்கப்படும்; வெப்பத்தால் ஏற்படும் சாவுகளையும் உணவு, தண்ணீர் பற்றாக்குறையையும் இந்நாடுகள் சந்திக்க நேரிடும்.

3.'வளரும்' நாடுகளில் வாழும் மக்கள் (ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்கு ஆளாகுபவர்கள்), குறிப்பாக ஏழை எளிய மக்கள், பூர்வகுடியினர், இந்த நெருக்கடியால், நாம் எதிர்கொள்ளும் தீவிர சவால்களான கணிக்கவியலாத மழைக்காலம், தண்ணீர் பற்றாக்குறை, மோசமடையும் காற்றின் தரம், கோவிட் 19 போன்ற பெருந்தொற்று நிலைமைகள் ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர். உயரும் கடல் மட்டமும் பேரலைகள், புயல், வெள்ளம் ஆகியனவும் சேர்ந்து கடற்கரை மற்றும் தீவுப் பிராந்தியங்களை அதிக ஆபத்தானவையாக ஆக்கியுள்ளன. பசிபிக் பெருங்கடலின் தீவு தேசங்கள் ஏற்கனவே மூழ்கத் தொடங்கிவிட்டன. உலகின் ஏறத்தாழ 23 கோடி மக்கள் உயர் அலை மட்டத்தை விட, 1 மீட்டர் கீழே வசிக்கிறார்கள். மிக மோசமான நிலைமைகள் ஏற்படுமானால், அவற்றால் மிகவும் வஞ்சிக்கப்பட்டோரும் ஏழைகளுமே மிக அதிக பாதிப்புக்குள்ளாவார்கள். (கடல்மட்டம் உயருவது குறித்த அறிவியல் சான்று: 1901–1990 காலகட்டத்தின் போது உலக சராசரி கடல் மட்டம் ஒரு வருடத்திற்கு 1.5 மிமீ அதிகரித்தது. 2005–2015 காலகட்டத்தின் போது ஒரு

வருடத்திற்கு 3.6 மிமீ கூடுதல் வேகம் பெற்றது. உலக பசுமை இல்ல வாயுவின் வெளியேற்றம் மட்டுப்படுத்தப்படவில்லை என்றால் 2100 ஆம் ஆண்டில் இது 0.61–1.10 மீட்டர் என அதிகரிக்க வாய்ப்புள்ளது.) 21 ஆம் நூற்றாண்டு முழுவதும் கடற்கரை பகுதிகளில் தொடர்ந்து கடல் மட்டம் உயர்ந்து, தாழ்வான கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி நிகழ்கிற பெருவெள்ளம், பெரும் புயல், கடற்கரை நிலஅரிப்பு ஏற்படுத்துவதைக் காண நேரிடும். உதாரணமாக, சுந்தர்பான்ஸ் (மேற்கு வங்கம்) தீவிர அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளது, இதனால் உள்ளூர் மீனவர்களும் தீவில் வசிக்கும் அனைவரும் அதிதீவிர பாதிப்புக்கு ஆளாகும் நிலை உருவாகும். வங்கக் கடலின் மட்டம் ஒவ்வொரு ஆண்டும் 3-8 மிமீ உயர்ந்து, தீவுகளில் நில அரிப்புக்கும், வெள்ளப்பெருக்கிற்கும் காரணமாகிறது. அடிக்கடி தாக்கும் புயல்களும், விவசாய நிலங்கள், மேல்மடை ஆறுகளில் உப்புநீர் ஊடுருவலும் மிகவும் அதிகரித்துள்ளன. பல்வேறு அறிக்கைகளின்படி, கொல்கத்தா, சென்னை, மும்பை, புவனேஷ்வர் உள்ளிட்ட உலக கடற்கரை நகரங்கள் பெருவெள்ளத்தால் மூழ்கும் ஆபத்து உள்ளது. இந்தியாவின் 17 கோடி மக்கள், கடற்கரை கிராமங்களில் அல்லது (கடற்கரை ஒட்டிய) சிறு நகரங்களில் வசித்து வருகின்றனர்.

4. நகர்ப்புர ஏழைகள், குடிசைவாசிகள், மீனவர்கள், நிலமற்ற விவசாயக்கூலிகள், நிலத்தை சார்ந்திருக்கும் பழங்குடியினர், கிராமப்புர பெண்கள் ஆகியோர் அதீத வானிலைச் சூழல், வெள்ளம், நீர் தேங்குதல் ஆகியவற்றின் நேரடி பாதிப்புகளை அனுபவிக்கின்றனர். மேலும், சூழலியல் சமநிலை மாற்றங்களால் ஏற்படும் சுமைகளை தலைகீழ் விகிதத்தில் சுமக்கின்றனர். ஒருபுறம் வளங்களின் நியாயமற்ற விநியோகமும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதும் அவர்களை அதீத பாதுகாப்பின்மையில் தள்ளிவிடுகிறது என்றால் மறுபுறம், இந்த பாதுகாப்பற்ற சூழல் மற்றவர்களைவிட கூடுதல் பாதிப்புக்கு ஆளாகும் நிலையில் அவர்களை நிறுத்தி விடுகிறது. காலநிலை மாற்றத்திற்கு மிகக் குறைவான பொறுப்பானவர்கள் மிகஅதிக (தலைகீழ் விகிதத்தில்) பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

5. காலநிலை மாற்றம், இந்தியா போன்ற ஒரு நாட்டிற்கு, உணவு பாதுகாப்பிலும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவதாக இருக்கிறது. மாறும் வானிலையால் விவசாயிகளின் ஒட்டுமொத்த பயிர் சுழற்சியும் சீர்குலையும். அரசாங்கத்தால் அளிக்கப்படும் முறையான பாதுகாப்பு வளையம் இல்லாதபோது, நாட்டில் மோசமடைந்து வரும் விவசாய நெருக்கடி விவசாய சமூகத்தையும், அதே போல நாட்டின் உணவுப் பாதுகாப்பையும் பெருமளவிற்கு பாதிக்கப் போகிறது.

இந்திய அரசாங்கம், காலநிலை மாறுதல் காரணமாக, விவசாய உற்பத்திக்கு ஏற்படப்போகும் ஆபத்தை அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், இந்தச் சிக்கலுக்கு முதலாவது காரணமான வழிமுறைகளை, கொள்கைகள், நடைமுறைகளை மாற்றுவதற்கு பதிலாக, காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் என்று சொல்லிக்கொண்டே, விவசாய உற்பத்தியின் ஆதாரங்களை கார்ப்பரேட் பெரு நிறுவனங்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

-தொடரும்

# தனித்து வாழும் பெண்களுக்கு தனி ரேஷன் அட்டை உத்தரவை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்!

1,96,16,093 ரேஷன் அட்டைகள் இருப்பதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தகவல் சொல்கிறது. தமிழகத்தில் 8.11 லட்சம் பெண்கள் தனித்து வாழ்கிறார்கள், குடும்பத்திற்கு வெளியே தனித்து வாழும் பெண்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது என்று தலைமை பதிவாளர் & மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையரின் 2016 செய்தி சொல்கிறது. இது மாநிலத்தின் மக்கள் தொகையில் 4.39% என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு சொல்கிறது. 2024ல் இந்த எண்ணிக்கை மேலும் கூடியிருக்கும். பல்வேறு சமூகக் காரணிகளாலும், மது விற்பனையால் அதிகரிக்கும் குடும்பப் பிரச்சனைகளாலும் இளம் வயதிலேயே தனித்து வாழும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இப்பெண்கள் அவர்களின் பெற்றோர் ஆதரவைப் பெறுவதும் பிரச்சனையாக இருக்கிறது.

ஆனால், உணவு அட்டை என்பது குடும்ப அட்டை என்று ஆகிப்போனதால், குடும்பத்திற்கு வெளியே வாழும் பெண்ணுக்கு அது கிடைப்பதில்லை. ஒரு பெண் பெற்றோர் அல்லது கணவனின் வீட்டில் இருப்பார் என்பதால், இந்த இரண்டு குடும்பங்களிலும் இல்லாத பெண்ணுக்கு குடும்ப அட்டை மறுக்கப்படுவது தமிழ்நாடு அரசின் தற்போதுள்ள நடைமுறையாக இருக்கிறது.

ஒரு பெண் தனித்து தன் பிள்ளைகளோடு வாழ்வார் என்றால், அவர் மணமுறிவு பெறாதவரையில் ரேஷன் அட்டை பெறும் தகுதி உடையவர் ஆக மாட்டார் என்றும், அவரின் பெயரை அவரின் கணவன் குடும்பத்திலிருந்து நீக்குவதற்கு மணமுறிவு உத்தரவின் பிரதி வேண்டும் என்றும் திருமணமாகாத பெண்கள் தங்களின் பெற்றோர்களுடன்தான் வாழ்வார்கள் என்பதால் தனியொரு பெண் குடும்பம் என்று கருதப்பட மாட்டார் என்றும் அரசின் தற்போதைய நடைமுறை சொல்கிறது.

மணமுறிவு போன்ற பிரச்சனையில் சிக்கிக்கொண்ட பெண்ணுக்கு ஆண் தரப்பு

# கல்ராயன் மலையும், பழங்குடியினருக்கு உரிமை வழங்கப்படாத 50,000 ஏக்கர் நிலங்களும்!

**அ.சந்திரமோகன்**

10 ஆண்டுகளுக்கு முன்னர், ஆந்திர வனங்களுக்கு செம்மரக்கட்டை வெட்டச் சென்று போலி மோதல்களில் சுட்டுக் கொல்லப்பட்ட போதும், சிறைகளில் சிக்கிச் சீரழிந்தபோதும், பரபரப்புடன் பேசப்பட்ட கல்ராயன் மலைப் பழங்குடியினர் அவலநிலை, மீண்டும் தற்போது ஒரு விவாதப் பொருள் ஆகியுள்ளது.

ஜூன் 2024 ல் கள்ளக்குறிச்சி நகரத்தில் 67 பேர் நச்சுச் சாராயம் குடித்து உயிரிழந்தனர். இதற்குப் பின்னர், ''கல்ராயன் மலையில் காய்ச்சிய கள்ளச் சாராயத்தால் உயிரிழப்பு - கல்ராயன் பழங்குடியினர் வாழ்வாதார சிக்கல்கள் என்ன?'' என்ற விவாதம் பொதுதளத்தில் எழுந்தது. இதை கவனித்த சென்னை உயர்நீதிமன்றம், ' பழங்குடியினர் வாழ்வாதாரப் பிரச்சினை' மீது தானாகவே முன்வந்து ஒரு வழக்கு பதிவு செய்து விசாரணை துவக்கியுள்ளது.

நாடு சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளான பின்னரும், ஆயிரக்கணக்கான கல்ராயன் மலை பழங்குடியினர் பாரம்பரிய நிலங்களுக்கு பட்டா உரிமையும், அனுபோக உரிமைகளும் பெறமுடியவில்லை என்பது மீண்டும் ஒருமுறை பொது சமூகத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

கல்வராயன் மலை பழங்குடியினர் நிலப் பிரச்சினை 'வன உரிமை சட்டம் FRA 2006 அடிப்படையில் நிலங்கள் வழங்கப்பட்டதா என்பது அல்ல; சில நூறு ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வரும் தங்களுடைய பாரம்பரிய நிலங்களுக்கு வழங்க வேண்டிய "பட்டா" வை வழங்காமல் இழுத்தடிக்கும் தமிழ்நாடு அரசு, நிலங்களை அளந்து சரிபார்த்து ஆவணப்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

### பிரச்சினையின் வரலாறு

கல்வராயன் மலைத் தொடர், கள்ளக்குறிச்சி - சேலம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 57,344 ஹெக்டேர் (சுமார் 1,40,000 ஏக்கர்) நிலத்தின் பரப்பளவை கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் மிகப்பெரிய பழங்குடியினர் சமூகமான 'மலையாளி' ( மலையில் வாழ்பவர்) என்பவர்கள் இங்கு வாழ்கிறார்கள்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர், கிருஷ்ண தேவராயர் மன்னராட்சி காலத்தில் (கிபி 1509 - 1529) கல்ராயன் மலைப் பழங்குடி விவசாயிகளிடம் இருந்து நில வரி வசூலிக்க "ஜாகீர்தாரி முறை" கொண்டு வரப்பட்டது. அப்போது, ஜடய கவுண்டன் ஜாகீர் (40 கிராமங்கள்), குரும்ப கவுண்டன் ஜாகீர் (40 கிராமங்கள்), அரிய கவுண்டன் ஜாகீர் (11 கிராமங்கள் ) ஆகிய மூன்று ஜாகீர்தார்களிடம் பரம்பரையாக வரி வசூலிக்கும்

பரிவு கிடைப்பதில்லை. ஒருவேளை கணவன் இறந்துபோய் விட்டால், கணவனின் பெற்றோர் விரும்பவில்லை என்றால் பெண்ணின் பெயரை ரேஷன் அட்டையிலிருந்து நீக்குவதற்கு உடன்பட மாட்டார்கள்.

இந்த நிலையில்தான் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 27 .10. 2021 தேதிய உத்தரவு கிடைக்கப் பெற்றது. அது தற்போதைய நடைமுறையை மாற்றி தனித்து வாழும் பெண்ணுக்கு ரேஷன் அட்டை பெறும் உரிமை உள்ளது என்று தெரிவிக்கிறது. மேலும்,

- (ஒரு பெண் எரிவாயுவுடன் கூடிய - இது கட்டாயம் இல்லை) சமையலறை அல்லது அடுப்பு உள்ளவராக இருந்தால்,
- தனித்து வாழ்பவர் என்று சுய பிரகடனம் (self-declaration) எழுத்து மூலம் அளிப்பார் என்றால்,
- வருவாய் ஆய்வாளர் அவரது வீட்டை ஆய்வு செய்து ஒப்புதல் அளிப்பார் என்றால்
- சம்பந்தப்பட்ட பெண் ஆதார் அட்டை, எரிவாயு பில் அளிப்பார் என்றால்

அப்பெண்ணுக்கு தனி ரேஷன் அட்டை வழங்கப்பட வேண்டும் என்ற புதிய நடைமுறையை தமிழக முதல்வரின் உத்தரவு தெரிவிக்கிறது.

பெண் தனித்து வாழும் உரிமை உள்ளவள்; அவள் ஆணைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை. அதன் அடிப்படையில் இந்த உத்தரவு பற்றிய பத்திரிகை செய்தியை எடுத்துக்கொண்டு மதுரையின் மாவட்ட உணவு வழங்கல் அதிகாரியைச் சந்தித்தபோது அவர் அதிர்ச்சி அடைந்தார். 'இது புதிதாக இருக்கிறது' என்று தெரிவித்தார். ஆனால், 'முதல்வரின் இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்தால் தனித்து வாழும் எண்ணற்ற பெண்களின் துயரம் முடிவுக்கு வருவதோடு உணவு வழங்கல் துறையின் சுமையும் குறையும்' என்றார். முதல்வரின் உத்தரவை நடைமுறையாக்க வேண்டும். உரிய அதிகார அமைப்புக்கு எழுதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக முதல்வரின் உத்தரவை உடனடியாக நடைமுறைப்படுத்தி லட்சக்கணக்கான பெண்களின் துயர் துடைக்கும் நடவடிக்கையை தமிழ் நாடு அரசு மேற்கொள்ளும் என்று அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழகம் எதிர்பார்க்கிறது, அரசை வலியுறுத்துகிறது.

உரிமை தரப்பட்டது. அவர்களாலும், அதற்குப் பிறகு ஜாகீர்தார்களின் வாரிசுகளாலும், இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட, வரிவசூல் என்ற பெயரால் கல்ராயன் பழங்குடியினர் கடுமையாக சுரண்டப்பட்டனர்.

கல்ராயன் மலை நிலங்கள், 1963 இனாம் எஸ்டேட் ஒழிப்பு சட்டத்தின் கீழ், டிசம்பர் 31,1965 ல் வருவாய் துறை அரசாணை 355 ன் கீழ் கொண்டு வரப்பட்டாலும் கூட, இந்திய அரசாங்கம் 23.8.1976 ல் தான் தனது நேரடியான ஆளுகைக்குள் எடுத்துக் கொண்டது. அக் காலகட்டத்தில், அங்கே சுமார் 28,250 ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்துவந்த பழங்குடியினரில் ஆகப் பெரும்பான்மையோர், பாரம்பரிய அனுபோகம் மிக்க இந்த நிலங்கள் தொடர்பான எவ்வித ஆவணங்களும் வைத்திருக்கவில்லை. "யார் நிர்வாகம் நடக்கிறது, ஜாகீர்தார் நிர்வாகமா, ரெவின்யூ நிர்வாகமா - யார் வரி வசூலிக்கிறார்கள் " என்பதெல்லாம் தெளிவில்லாத நிலைமையில், பழங்குடிகள் தங்கள் நிலங்களுக்கு எவ்வித நிலவரி ரசீது / ஆவணங்களையும் பெற்றிருக்கவில்லை.

இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்குள் வந்தபிறகு, 1.10.77 ல் நிலவரித் திட்டப்பணி மேற்கொள்ளப் பட்டது. அதனடிப்படையில் கல்ராயன் மலையின் நிலவளம் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டது.

1) பூர்விக காடுகள் 35,395 ஹெக்டேர் (சுமார் 87,425 ஏக்கர்)

2) உழவு நிலம் (காடு புறம்போக்கு எனச் சொல்லப்பட்டது) 10,113 ஹெக்டேர் (சுமார் 25,000 ஏக்கர்). அதாவது சுமார் 25,000 ஏக்கர் நிலங்கள் நேரடியாக பயிரிடப்பட்ட உழவு காடுகள் அல்லது புனல் காடுகள் வகைப்பட்டதாகும்.

கல்ராயன் பழங்குடியினர் நில உரிமைகள் முறைப்படுத்தப் படாததால், தமிழ் நாடு வனத்துறை புதிய ஜாகீர்தாரர்களாக மாறியது. 'கல்ராயன் மலை முழுவதும் உள்ளது "காடு" (RF-Reserved Forest) தான், அதில் பழங்குடியினருக்கு எவ்வித உரிமையும் இல்லை' எனத் தொடர்ந்து சித்திரவதைகள், தாக்குதல்கள், நில வெளியேற்றங்கள், வழக்குகள் கைதுகளைத் தொடுத்தது.

நிலவரித் திட்டத்தில் இறுதியாக பட்டா வழங்கப்பட்ட 8154 ஹெக்டேர் (20,000 ஏக்கர்) நிலங்களிலும் கூட, தமிழ்நாடு வனத்துறையினர் அத்துமீறி நுழைந்து, 'இவை எல்லாம் காடு RF - இங்கிருந்து வெளியேறுங்கள்!' எனத் தொடர்ந்து பழங்குடி விவசாயிகள் மீது தாக்குதல் தொடுக்கின்றனர். மற்றொரு புறம், ஆடுமாடுகள் மேய்ப்பது, புற்கள் பறிப்பது, விறகிற்காக காய்ந்த குச்சிகளை சேகரிப்பது - அனைத்தும் குற்றங்கள் ஆக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. கோழி, ஆடுகள், பணம் ஆகியவற்றை ஏழைப் பழங்குடிகளிடம் இருந்து வனக்காவலர்கள் பறித்துச் சென்றனர்.

ஜாகீர்தாரி முறையில் வரி விதிப்பும், பழங்குடியினர் உரிமைகளும்

தமிழக வனத்துறை சொல்வது போல கல்ராயன் மலைப் பகுதி நிலங்கள் முழுவதும் காப்புக் காடுகள் #RF தானா, உழவு செய்யப்பட்ட நிலங்கள் உள்ளதா, இல்லையா ? எது உண்மை என அறிந்து கொள்ள ஜாகீர்தாரி முறையில், பழங்குடியினர் மீது நிலவிய வரிவிதிப்புகளை ஒப்பிட்டு சரிபார்த்து கொள்வோம்.

1) கலப்பாடி வரி- உழுவதற்கு வரி

2) கொடுவா வரி - மரங்கள், கட்டைகள் வெட்ட வரி

3) பில்லு வரி - புல் பறிக்க வரி

4) புனல்காடு வரி - இடம் மாற்றி செய்யும் சாகுபடி நிலத்துக்கு வரி

5) ஆட்டு வரி - ஆடுகளை மேய்ப்பதற்கு வரி

6) கால்நடை வரி -மாடுகள் மேய்க்க வரி

ஆகிய வரிகள் நடைமுறையில் இருந்துள்ளன.

அதாவது, பருவத்திற்கு ஏற்ப மலைச் சரிவுகளில் மரங்கள் அகற்றப்பட்டு தற்காலிக சாகுபடி செய்யப்பட்ட / இடம் மாற்றி செய்யும் புனல்காடு/பொனக்காடு விவசாயம் துவங்கி, உழவுக் காடு வரையும், பல்வேறு பழங்குடியினர் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும் உரிமைகள் தரப்பட்டு இருந்தன; அவை வரிவிதிப்பு மூலமாக சட்டப்பூர்வமானதாக ஆக்கப்பட்டிருந்தன. எனினும், 1977 க்குப் பிறகு, இத்தகைய அனைத்து உரிமைகளும் தமிழக வனத்துறையால் பறிக்கப்பட்டன.

## நீதிமன்ற உத்தரவுகளை அலட்சியப்படுத்திய அரசு நிர்வாகம்

தமிழ்நாடு வனத்துறையின் அட்டூழியங்கள் தொடர்ந்ததால், கல்ராயன் பழங்குடியினர் கடந்த 1985 ல் சென்னை உயர்நீதிமன்றத்தில், 'தங்களுடைய நிலம் மீதான உரிமையில் நீதி வேண்டும்' என ஒரு ரிட் மனு தாக்கல் செய்தனர். (மனு எண் 1210/85). இந்த வழக்கு விசாரணையில் இருக்கும்போது, தமிழ்நாடு வருவாய் துறை ஆணை எண் 1168 (தேதி 25.7.89) மூலம், 'பழங்குடியினர் நில அடமானம் செய்யக் கூடாது' என்று அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளை முடக்கியது.

நிலம் மீது உரிமை கோரிய ரிட் மனு 1210/85 ன் மீது, ஒன்பது ஆண்டுகள் கழித்து சென்னை உயர்நீதிமன்றம் 24.2.94 ல் தான் தீர்ப்பு வழங்கியது. "கல்ராயன் மலைப் பழங்குடியினர் மூன்று மாத காலத்தில், நிலம் ஒப்படைக்க கோரி விண்ணப்பிக்க வேண்டும்; அவற்றை பரிசீலித்து தமிழ்நாடு அரசாங்கம் ஆறுமாத காலத்தில் முடித்து தர வேண்டும்." என உத்தரவு இட்டது. ஆனால், இத்தகைய உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின் மீது எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும்

மேற்கொள்ளாத அன்றைய விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்/ நிர்வாகம், 13.6.95 ல் "கல்ராயன் பழங்குடியினரிடம் இருந்து மனுக்கள் எதுவும் வரவில்லை" என உயர்நீதிமன்ற உத்தரவை அலட்சியமும் செய்தது. இப்பிரச்சினை அப்போது தமிழ்நாடு சட்டமன்றத்திலும் எழுப்பப் பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 5.8.95 ல் தமிழ்நாடு நிலநிர்வாக ஆணையர் ( திரு இளங்கோவன் IAS) அவர்கள், தமிழ்நாடு அரசு வருவாய் துறை செயலாளருக்கு கடிதம் எழுதினார். 'மனிதாபிமானத்துடன் பழங்குடி மனுதாரர்களை நேரில் சந்தித்து பட்டா வழங்க ஏற்பாடு செய்யுங்கள்' எனவும், அக் கடிதத்தில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரை கோரியிருந்தார். மேலும், விழுப்புரம் ஆட்சியர் சரிபார்ப்புக்கு பின்னர் நில ஒப்படை செய்ய வேண்டும் எனவும், "கல்ராயன் மலை நிலப் பிரச்சினையை பிற மலைகளில் உள்ள நிலவுரிமை பிரச்சினை மாதிரி அணுகக் கூடாது எனவும், தமிழகத்தில் மலை நில விற்பனை மீதுள்ள பொதுவான தடை இங்கு பொருந்தாது எனவும், கல்ராயன் மலை பழங்குடியினர் பயன்பாட்டில் உள்ள நிலங்களை, தமிழ்நாடு வன பாதுகாப்பு சட்ட வரம்பிற்குள் இருந்து நீக்க வேண்டும்" எனவும் தெளிவாக பரிந்துரைத்தார். எனினும், அன்றைய விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் செயல்படவில்லை.

மாறாக , தமிழ்நாடு அரசு வருவாய் துறை அமைச்சர் தலைமையில் 17.8.98 ல் நடைபெற்ற கூட்டத்தில் இப்பிரச்சினை பரிசீலனை செய்யப்பட்டு, தீர்வு காண்பதற்கு, ஐஏஎஸ், ஐபிஎஸ் தகுதிவாய்ந்த வருவாய், நிர்வாக, வனத் துறைகளைச் சார்ந்த ஏழு அதிகாரிகள் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. மெத்தப்படித்த அந்த உயர்நிலைக் குழு அதுவரையிலான கல்ராயன் மலை பழங்குடியினரின் நிலங்கள் மீதான உரிமைகள் பற்றிய மொத்த விவகாரத்தையும் ஒதுக்கி தள்ளிவிட்டு, 'வெறும் 4217 பழங்குடி குடும்பங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டதாகவும், அவர்களுக்கு தலா 1 ஹெக்டேர் வீதம் மட்டும் நிலம் வழங்கலாம்' எனவும் பரிந்துரைத்தது.

மேற்படி உயர்நிலைக் கமிட்டி கூட்டத்தின் குறிப்புகள் (minutes), தமிழ்நாடு வருவாய் துறை மற்றும் வனத்துறை கல்ராயன் பழங்குடியினர் வாழ்வாதாரப் பிரச்சினையில் அநீதி இழைத்துள்ளதை அம்பலப்படுத்தும் வகையில் உள்ளது.

இப்பிரச்சினையில், இதற்குப் பிறகு விழுப்புரம் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்ற டாக்டர் பரம்ஜித் சிங் சித்து அவர்கள் தனது பரிந்துரைகளை வருவாய் துறை செயலாளருக்கு அனுப்பி வைத்தார். அவர் அனுப்பிய பரிந்துரை கடிதம் / அறிக்கை ( எண் பி 8/7218/98-2 தேதி 7.3.99), அரசு நிர்வாகத்தின் இத்தகைய அலட்சியங்களை, தவறுகளை, பல்வேறு உண்மைகளை அம்பலப்படுத்துகிறது.

டாக்டர் பரம்ஜித் சிங் சித்து அறிக்கையின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு

1) கல்ராயன் மலை ஜாகீர்தாரர்களின் கொடுஞ் சுரண்டலுக்கு உள்ளான பழங்குடியினர், 1975 க்குப் பின்னர் தான், கொத்தடிமை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

2) இங்குள்ள பழங்குடியினர் தங்கள் சாகுபடி நிலங்களை "காடு" என்ற பெயரிலேயே அழைக்கின்றனர். ஆனால், கல்ராயன் மலை நிலத்தை செட்டில்மண்ட் செய்த அதிகாரிகள், உழவு செய்த "காடு" என்பதை தவறாக வனம்/ Forest என வியாக்கியானம் செய்து, அதாவது காடு புறம்போக்கு என்பதை, காப்புக் காடுகள் (RF Reserve Forest) என கிராம ஆவணங்களில் தவறாக வகைப்படுத்தி விட்டனர்.

3) "காடு புறம்போக்கு" என வகைப்படுத்தப்பட்ட நிலங்களில் இன்னமும் பழங்குடியினர் சாகுபடியில் உள்ள 3274 ஹெக்டேர் (8087 ஏக்கர்) நிலங்களை தரிசாக மறுவரை செய்து பழங்குடியினருக்கு வழங்க வேண்டும்.

4) மேலும் கூடுதலாக, எந்த நிலமெல்லாம் சாகுபடிக்கு தகுதியானதாகவும், பழங்குடியினர் பயன்பாட்டிலும் இருக்கிறதோ, அவை எல்லாம் "காடு புறம்போக்கு " என்ற வரையறை யிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

5) ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட 4217 குடும்பங்கள் அல்லாத பிற நிலமற்ற பழங்குடியினர் பற்றிய ஆய்வு /சர்வே மேற்கொள்ள வேண்டும்.

6) இரண்டு ஆண்டு காலத்தில், இப் பணிகளை முடித்து தர, சிறப்பு அலுவலர்கள் (தாசில்தார் முதல் கடைநிலை ஊழியர் வரை) 78 பேர் புதிதாக ஆளெடுக்கப்பட வேண்டும். இதற்கு சம்பள ஒதுக்கீடு ரூ.1,09,43,250 - தேவைப்படும்.

இவை அனைத்திற்கும் ஒப்புதல் அளிக்க வேண்டும்"என அவ்வறிக்கையில் நில நிர்வாக ஆணையரிடம் கோரிக்கையும் விடுத்திருந்தார்.

### அரசு அலட்சியம் தொடர்கிறது

தமிழ்நாடு நில நிர்வாக ஆணையர், மேற்கண்ட இக் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு செயலாளருக்கு 28.4.99 ல் ஒரு அறிக்கை அனுப்பி வைத்தார். அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

இதற்கு பின்னர், பத்தாண்டுகள் கழித்து, 20.7.2008 ல் திரு. M.குழந்தைவேல், தனி வட்டாட்சியர் (கல்வராயன் மலை) - (வெள்ளிமலை, சங்கராபுரம் வட்டம்) அவர்கள் மீண்டும் ஒரு குறிப்புரையை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பினார்; 3274 ஹெக்டேர் நிலங்களை மீள தரிசாக மாற்றம் செய்து பழங்குடியினருக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் அதில் கோரியிருந்தார்.

10,000 பழங்குடியினர் தொடர்ந்து 3 நாட்களாகப் போராடியும் அலட்சியம் செய்தது அரசாங்கம்!

கடந்த 1998 ல், தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த உயர்நிலைக் கமிட்டி ஆய்வு செய்து, 4170 கல்ராயன் பழங்குடியினருக்கு தலா 1 ஹெக்டேர் ( சுமார் 2.5 ஏக்கர்) நிலம் தருவதாக ஒப்புக் கொண்டு 20 ஆண்டுகளான பின்னரும் கூட வழங்கவில்லை என, கடந்த 2018 ஏப்ரல் 19, 20, 21 தேதிகளில் தொடர்ந்து மூன்று நாட்களாக வெள்ளிமலையில் சுமார் 10,000 பழங்குடியின மக்கள் அணிதிரண்டு போராடினார்கள்; தற்போதைய கள்ளக்குறிச்சி மாவட்டம் அன்றைய ஒன்றிணைந்த விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அல்லது கீழ்மட்ட அதிகாரி எவர் ஒருவரும் கூட நேரில் வந்து பழங்குடி மக்களை சந்திக்கவில்லை; மொத்த தமிழக அரசு இயந்திரமும், ஆட்சியாளர்களும் அவர்களை அலட்சியம் செய்தது.

இப்படியாக பல்வேறு வகையில், பரிந்துரைகள் செய்யப்பட்ட பிறகும், 15 ஆண்டுகள் ஆன பின்னரும் கூட, கல்ராயன் பழங்குடியினருக்கு நிலவுரிமை வழங்க வேண்டிய தமிழ்நாடு அரசின் செயற்பாட்டில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை.

### வழக்குகளும், நீதிமன்ற உத்தரவுகளும்

2015 ம் ஆண்டில், கல்ராயன் மலை பழங்குடியினர் நிலப் பிரச்சினை தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் தமிழ்மணி அவர்கள் ஒரு பொதுநலவழக்கு தொடுத்தார். இதன் மீது விசாரணை செய்த சென்னை உயர்நீதிமன்றம் கல்ராயன் மலை பழங்குடியினர் நிலை பற்றி ஆய்வு செய்ய ஒரு அட்வகேட் கமிஷன் அமைத்தது. இதனடிப்படையில், கல்ராயன் மலை பழங்குடிகள் மேம்பாட்டுக்காக, உயர்நீதிமன்ற வழக்கறிஞர் டாக்டர். சுரேஷ் கமிட்டி பரிந்துரைகளை சமர்ப்பித்தது; இவற்றை அமலாக்க வேண்டும் என 2016 ல் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு, எட்டு ஆண்டுகளான பின்னரும், இன்று வரையும் தமிழ்நாடு அரசு அமல்படுத்தவில்லை.

தற்போது இப்பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றம் தானாகவே முன்வந்து எடுத்த வழக்கு வழியாக, மீண்டும் ஒருசுற்று முன்வந்துள்ளது. இதுதொடர்பாக, 2023 - 24 ம் ஆண்டுகளில் கல்ராயன் மலை பழங்குடியினர் சார்பாக, மலையாளி பேரவை அமைப்பு தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினடிப்படையில், ஒரு சிறப்பு தாசில்தார் நியமனம் செய்யப்பட்டு, பழங்குடியினர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பழங்குடி விவசாயிகளுக்கு பட்டா உரிமைகள் வழங்கும் தீர்வுக்காணும், காத்திரமான நிர்வாக நடவடிக்கைகளில், சமூகநீதி பேசும் தமிழ்நாடு அரசாங்கம் விரைவாக ஈடுபட வேண்டும்.

பக்கம் 2 தொடர்ச்சி

எனது தொகுதியில் பாசன வாய்க்கால் மூலம் நடைபெறும் விவசாயமே பிரதானமாக உள்ளது. பாசன வாய்க்கால்கள் 150 ஆண்டுகள் பழமையானவையாக உள்ளன. கால்வாய்களைப் புனரமைப்பு செய்து இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பீகார், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேச மாநிலங்கள் பயன்பெறும் வகையிலான கத்வான் நீர்த்தேக்க திட்டம் விரைந்து முடிக்கப்பட வேண்டும். கங்கை நதிக் கரையில் உள்ள எனது தொகுதி மண் அரிப்பினால் பாதிப்படைந்து வருகிறது. உரிய பாதுகாப்பு நடவடிக்கையை எடுப்பதோடு, சிறு அணைகள் கட்டுவதும் அவசியமானதாக உள்ளது.

அதுபோல் எங்கள் தொகுதியில் அடிக்கடி தீ விபத்துகள் நடந்து வருகின்றன. ஆகவே கிராம பஞ்சாயத்து மட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

சகாரா நிறுவனத்தில் முதலீடு செய்து பணத்தை இழந்தவர்கள் ஏராளமாக உள்ளனர். சகாரா ஊழலில் பணம் இழந்தவர்களின் பணம் திருப்பி கொடுக்கப்படும் என உள்துறை அமைச்சர் ஏற்கனவே உத்தரவாதம் கொடுத்திருக்கிறார். மக்களின் சேமிப்பு பணம் திரும்ப கிடைப்பதை உத்திரவாதம் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!
மாதம் இருமுறை
தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200
தீப்பொறி சந்தாதாரராக
QR கோடை ஸ்கேன் செய்யவும்
நன்கொடைகள் தாரீர்

# பெண்கள் சுயசார்பு, சுயமரியாதை, கவுரவம் பெற என்ன வழி?

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலக் கூட்டம் ஜூன் 13ல் சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விவாதித்தது. தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் வேலை மறுப்பு, கூலி குறைப்பு, வரதட்சணை, பணியிடத்தில் பாலியல் வன்கொடுமை போன்றவை கவனத்துக்கு வந்தன. அவற்றுள் ஒன்று நுண்கடன் பிரச்சினை.

சீர்காழிக்கு அருகிலுள்ள சேமங்குளம் கிராமத்தில் வசித்து வந்த மூன்று குழந்தைகளுக்கு தாயான தலித் பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். கடன் வசூல் செய்ய வந்த தனியார் நுண்கடன் முகவர்கள், அந்தப் பெண் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் வீட்டு வாசலிலேயே உட்கார்ந்து விட அவரது சுயமரியாதை நொறுங்கிப்போனது. வீட்டின் உள்ளே சென்று தூக்கிட்டுக் கொண்டார். இதேபோல் பிப்ரவரி 2024 ல் மயிலாடுதுறை அருகிலுள்ள கேணிக்கரை கிராமத்தைச் சேர்ந்த ஜெயலட்சுமி (33) நுண்கடன் முகவர்களின் நெருக்குதல், அவரது கவுரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியதை தாங்காமல் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். தலித் பெண்ணான இவரது குழந்தை பரிதவித்துக் கொண்டிருக்கிறது.

இது போல் பல மாநிலங்களில் நூற்றுக்கணக்கான பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆந்திராவில் மட்டும் தனியார் நுண்கடன் நிறுவனங்கள் 70 பெண்களை தற்கொலையில் தள்ளி உள்ளன. இது அகில இந்திய பிரச்சனையாக உள்ளது.

சீர்காழி, பனங்காட்டான்குடிக்கு அருகிலுள்ள எலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த நடராசன் என்பவரது வீட்டை ஜப்தி செய்யப்போவதாக அச்சுறுத்தி பணம் பறித்துள்ளனர். பெருந்தோட்டம் கிராமத்தில் 16 தனியார் நிறுவனங்கள் சுமார் 6 கோடி கடன் கொடுத்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டம் வேப்பத்தூர் பேரூராட்சியில் உள்ள 2000 குடும்பங்களில் 90% குடும்பங்கள் இந்த தனியார் நிறுவனங்களிடம் கடன் பெற்றுள்ளன. இந்த பேரூராட்சியில் மட்டும் மக்கள் சுமார் ரூ 18 கோடி கடன் வாங்கியுள்ளதாக ஜெசிந்தா கூறுகிறார். வட்டி விகிதம் 24 % முதல் 31% வரை வசூலிக்கப்படுகிறது. கள்ளக்குரிச்சி மாவட்டம், கூட்டடி-கள்ளக்குரிச்சி கிராம விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த வசந்தா ரூ 50000 கடனுக்கு ரூ 64 ஆயிரம் வட்டி (29%) கொடுத்துள்ளதாக ஆறுமுகம் கூறுகிறார். 60% வரை வட்டி வசூலிப்பதாக பந்துவாக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) இளவரசன் சொல்கிறார்.

1989ல் சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்கடன் வழங்கும் முறை திரு. மு.கருணாநிதியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் மிகப் பெரிய பொருளாதாரமாக வளர்ந்தது. கிராமப்புர பெண்களின் சேலை முடிச்சுகளில் இருந்த 'ஆறு, அறுநூறாகி' வங்கிகளில் குவிந்தன. 90% முதல் 95% வரை வட்டியுடன் கடன் வசூலானதால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முண்டியடித்துக் கொண்டு கடன் கொடுத்தன. இதைக்கண்டு நாக்கில் எச்சில் சொட்டச் சொட்ட தனியார் நிறுவனங்களும் பெரிய அளவில் இந்த தொழிலில் இறங்கின. சிறீராம் பைனான்ஸ் தொடங்கி, ஹெடிஎப்சி, எல் அண்ட் டி, ரெப்கோ பெரும்பாலான பெரு நிறுவனங்களும் நுண்கடன் வணிகத்தில் இறங்கியுள்ளன. முதலில் கால்பதித்த ஈக்கிடாஸ், உஜ்ஜீவன் போன்ற நிறுவனங்கள், சிறுவங்கிகளாக பதிவு செய்து கொண்டதுடன் ஏடிஎம் இயந்திரங்கள் வைத்துக் கொள்ளும் அளவுக்கு கொழுத்துள்ளன. லாபநோக்கமில்லாத



நடவடிக்கை, பெண்கள் அதிகாரம் என்ற பேரில் இறங்கியுள்ளன. ஆனால் இந்த நிறுவனங்கள், அடாவடியான, அநீதியான வழிகளில் வட்டி வசூலித்து கொள்ளை லாபம் பார்க்கின்றன. அதிமுக ஆட்சியில் சுய உதவிக்குழு திட்டம் புறக்கணிக்கப்பட்டதால், அந்த இடத்தை

தனியார் நுண்கடன் நிறுவனங்கள் புற்றீசல் போல் ஆக்கிரமித்துக் கொண்டன.

இந்த நிறுவனங்கள் தங்களுக்கு சூட்டிக்கொண்டுள்ள பெயர்களைக் கேட்டாலே சிரிப்பு வரும். கிராம விடியல், மகர ஜோதி, புது ஆறு, ஆசிர்வாதம், சமதா, மகிழ்ச்சி, சிகரம் என நீள்கின்றன. தங்கள் அடாவடியை மறைத்துக்கொள்ள சொக்கவைக்கும் பெயர்கள்! இவை பெண்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கின்றன. பெண்கள் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு என்றெல்லாம் பசப்பினாலும் பெண்கள் எளிதான இலக்கு என்பதால் கடன் கொடுக்கின்றனர். தங்கள் சுயமரியாதை, தன்மானத்தை இழக்க விரும்பமாட்டார்கள். அதையே கருவியாக்கி எப்படியும் பணம் கறந்து விடலாம் என்பதுதான் இந்த தனியார் நிறுவனங்களின் திட்டம்.

கிராமப்புரங்களில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. விவசாயம் கைவிட்ட நிலையில் மாற்று வேலைவாய்ப்பும் உறுதியில்லாத போது கடன் வாங்குவதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை. குறைந்த வட்டி வசூலிக்கும் தேசிய வங்கிகள், விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் கடன் கொடுப்பதில்லை. அவை விதிக்கும் நிபந்னைகளும் ஏற்படுத்தும் அலைச்சலும் வறியவர் முதல் நடுத்தரப் பிரிவினர் வரை விரட்டி அடிக்கின்றன. செல்வாக்கு உள்ளவர்கள் மட்டுமே கடன் வாங்க முடியும்.

அடாவடி வட்டி, அவமானம், அச்சுறுத்தல் இருந்தாலும் எளிய நிபந்தனைகள், வீட்டுக்கு பக்கத்திலேயே கடன் என வலை விரிக்கும் இந்த நிறுவனங்களை நாடி பெண்கள் படையெடுக்கின்றனர். படிப்பு, மருத்துவம், திருமணம், சடங்குகள், மோட்டர் சைக்கிள், டிராக்டர் என அனைத்து தேவைகளுக்கும் நுண்கடன் நிறுவனங்களிடம் கைகட்டி நிற்கின்றனர். ஒரு நிறுவனத்தில் வாங்கும் கடனை அடைக்க இன்னொரு நிறுவனத்திடம் கடன், அதை அடைக்க இன்னொரு நிறுவனத்திடம் கடன் என வாங்குகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் நாலைந்து நிறுவனங்களிடம் கடன் பெற்றுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 65 லட்சம் கிராமப்புர குடும்பங்கள் ஒவ்வொன்றும் ரூ 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை கடனாளி. கடன் சங்கிலியில் சிக்கி மீள முடியாமல் உள்ளன. கடன் நிறுவனங்களுக்கு ‘விடியல்’ பெண்களுக்கு இருட்டு; கடன் கொடுப்பவருக்கு ‘சிகரம்’ கடன் வாங்கிய பெண்களுக்கு பள்ளத்தாக்கு!

தவணை கட்டத் தவறும் குடும்பங்களின் ஆதார் அட்டைகளை முடக்கி விடுகின்றனர். ஆதாரை உயிர்ப்பிக்க வேறு இடத்தில் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்படுவதாக வீரடிப்பட்டி (புதுக்கோட்டை) குமார் சொல்கிறார்.

தமிழ்நாட்டில் 34 தனியார் நுண்கடன் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவை கிராமப்புரத்தில், ஆண்டுக்கு 32 ஆயிரம் கோடிக்கு மேல் வியாபாரம் செய்கின்றன. இந்திய அளவில் 3 லட்சம் கோடிக்கு மேல் வியாபாரம் நடக்கிறது. இந்த நிறுவனங்களில் வேலை செய்யும் பிராந்திய மேலாளர் ஒருவருக்கு மாதம் ரூ 6 லட்சம் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் பணம் வசூல் செய்பவர்களுக்கும் அலுவலகங்களில் வேலை செய்வோருக்கும் மாதம் ரூ 18000 முதல் 22,000 மட்டுமே வழங்கப்படுகின்றன. (நாள் சம்பளம் ரூ 600 முதல் 700 வரை). இதற்கு இவர்கள் நாயாய் பேயாய் அலைய வேண்டும். இளைஞர் மத்தியில் தலைவிரித்தாடும் வேலை இல்லா திண்டாட்டத்தைப் பயன்படுத்தி அநியாயமாக சுரண்டி கொழுக்கின்றன இந்த நிறுவனங்கள். வெளியூரைச்சேர்ந்த ஆண், பெண்களையே இந்த நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன.

திமுக அரசு பெண்கள் முன்னேற்றத்துக்காக ‘விடியல் பயணம்’ ’மகளிர் உரிமைத் தொகை’ உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தி வருவதால் மாதமொன்றுக்கு ரூ 2000 முதல் 3000 வரை சேமிப்பு உருவாகிறது என்று கூறுகிறது. இலவச பேருந்து பயணத்தால் மட்டும் மாதம் ரூ 888 மிச்சமாகிறது என்றும் கூறுகிறது. இதனால் கட்டுமான வேலை உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலில் ஈடுபடும் பெண்கள் சுயமரியாதை பெற்றிருக்கிறார்கள் என்றும் சொல்கிறது. ஆனால், தனியார் நுண்கடன் நிறுவனங்களிடம் கிராமப்புர குடும்பம் ஒவ்வொன்றும் ரூ 49,500 முதல் 95,000 வரை கடனாளியாக உள்ளதே அரசுக்கு தெரியுமா? ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ 2300 டாஸ்மாக் கடைக்கு (குடிக்காத குடும்பங்களை கணக்கிட்டால் இந்த தொகை இன்னும் அதிகமாகும்) சென்று அரசின் வருமானமாக மாறுவதும் அரசுக்கு தெரிந்ததுதானே?

தனித்து வாழும் பெண்களுக்கு குடும்ப அட்டை போன்ற நல்ல திட்டங்களை அறிவித்தாலும் தமிழ் நாட்டு பெண்களை தனியார் நுண்கடன் அரக்கர்களிடமிருந்து மீட்க அரசுக்கு திட்டம் வேண்டாமா? தனியார் நுண்கடன் நிறுவனங்களை தடை செய்ய வேண்டும். தமிழ்நாடு மகளிர் திட்டத்தின் வாயிலாக, சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்கடன் பெறும் திட்டங்களை அதிகரிக்க வேண்டும். தேசிய வங்கிகள், விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வட்டியில்லா கடன் தருவதற்கு ஒன்றிய அரசுக்கு அரசியல் அழுத்தம் தர வேண்டும். கிராமப்புர பொருளாதாரத்தில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சுயசார்பு அளிக்கும் திட்டங்கள் வேண்டும். அப்போதுதான் பெண் மய்ய திட்டங்கள் உண்மையான பலனளிக்கும். பெண்கள் சுயசார்பு, சுயமரியாதை, கவுரவம் பெற வழியாகவும் இருக்கும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் வரும் நாட்களில் தொடர் இயக்கங்களை நடத்த முடிவு செய்துள்ளது.

**-செய்திகள் உதவி: ரேவதி, மாதவி**

# நீட் தேர்வு பொருத்தமானதா ?

## (பேராசிரியர் ஜவகர் நேசன் எழுதிய ஆங்கில கட்டுரையின் அடிப்படையில் எழுதப்பட்டது *கல்பாக்கம் நடராஜன்* )

***நீட் - மருத்துவக் கல்வி மாணவர்கள் சேர்க்கையை வணிகமயமாக்கியது!***

மருத்துவம் வணிகமாவதைத் தடுக்கவும், மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்தவும், மிகச்சிறந்த மருத்துவர்களை உருவாக்கவும் நீட் தேர்வு வழி வகுக்கும் என்று வியந்து ஓதப்பட்டது. இங்கு சொல்லப்பட்ட எந்த இலக்குகளையும் நீட் தேர்வு எட்டவில்லை. மாறாக, மருத்துவக் கல்வி மேலும் வணிகமயமானது. தனியார் கல்லூரிகளில் நீட் தேர்வுக்குப் பிந்தைய காலகட்டத்தில் ஓர் ஆண்டிற்கான கட்டணம் ரூபாய் 25 லட்சத்திலிருந்து 35 லட்சமாக உயர்ந்துள்ளது. நீட் தேர்வு பயிற்சி மையங்களின் வருமானம் 1.5 லட்சம் கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால் மருத்துவக் கல்வி என்பது ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக மாறி உள்ளது.

***தகுதியற்ற தேசிய தேர்வு முகமையின் முறைகேடுகள் மற்றும் ஊழல்கள்!***

நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (தே.தே.மு. National Testing Agency NTA ) கல்வியாளர்களால் வழி நடத்தப்படவில்லை. உண்மையில் அதில் கல்வியாளர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம். மேட்டுக்குடி மக்களுக்கான நீட் தேர்வை நடத்தும் உச்சபட்ச அதிகாரம் கொண்ட தே.தே.மு இந்த ஆண்டு, தேர்வில் நேரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு, எத்தகைய அறிவியல் அடிப்படையும் இன்றி, தர்க்கமும் இன்றி கருணை அடிப்படையில் மதிப்பெண்களை வழங்கியது. இந்த ஆண்டு கேள்வித்தாள் கசிவு, ஆள் மாறாட்டம், ஒரு சில பயிற்சி மையங்களில் இருந்து அதிக மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றது போன்ற பல குளறுபடிகள், ஊழல்கள் மிகப் பெரும் அளவில் நடந்துள்ளன. இதனால் இன்று இந்தியா முழுவதும் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று நடந்து வருகின்றன.

நீட்டுக்கு எதிரான போராட்டங்கள் நாடெங்கும் வலுப்பெற்றதால், ஒன்றிய அரசு ஏழு உறுப்பினர் அடங்கிய ஓர் உயர்மட்டக்குழுவை நியமித்து இந்த முறைகேடுகளை ஆராய்ந்து பரிந்துரைகளை செய்யக் கோரியது.

இந்தக் குழு முறைகேடுகள் இல்லாமல் வெளிப்படைத் தன்மையுடன் நீட் தேர்வுகளை நடப்பதை உறுதி செய்யுமாறு இதே தே.தே.மு வை கேட்டுக்கொண்டது. ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறையை(CBI) நீட் தேர்வின் முறைகேடுகள் பற்றி விசாரிக்கப் பரிந்துரைத்தது. நீட் தேர்வு அறிவியல் ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் எந்தக் குறையும் அற்றது. சிறந்த மருத்துவர்களை தேர்ந்தெடுக்க நீட் தேர்வு முறையே ஒரே வழி ; சிறந்த வழி என்று பொய்யான கருத்துக் கட்டமைக்கப்படுகிறது. நீட் தேர்வில் நிகழ்ந்துள்ள குளறுபடிகளை, ஊழலை நீக்கினால் போதுமானது என்ற கருத்து பரப்பப்படுகிறது. இதன் மூலம் நீட் தேர்வு அடிப்படையில் கல்விக்கு எதிரானது, அறிவியல் பூர்வமானது அல்ல என்ற உண்மை மறைக்கப்படுகிறது. ஊழலை மட்டுமே மையப் பொருளாக வலியுறுத்தி பேசுவது, இந்த உண்மையை மறைக்கும் தந்திரமே.

***நீட் தேர்வின் கட்டமைப்பே மிகவும் தவறானது; பயனற்றது!***

2021 ஆம் ஆண்டு தமிழக அரசு நீட் தேர்வின் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய நியமித்த உயர்நிலைக் குழு மிகச் சிறந்த ஆய்வறிக்கை தந்தது. அவ்வறிக்கை, நீட் தேர்வு கல்வி ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் தவறானது, பயனற்றது என்று தெளிவாக நிறுவியது. அதன் அடிப்படையே பிழையானது. நீட் தேர்வுக்கான கேள்வித்தாள் ஒன்றிய அரசு நிறுவனமான NCERT இன் CBSE பாடத்திட்டத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப பல்வேறு பாடத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாளர்களின் குழு உருவாக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனையின்படி தேர்வுக்கான பொது பாடத்திட்டத்தை உருவாக்கி இருக்க வேண்டும். அந்தப் பொது பாடத்திட்டத்தின் அடிப்படையில் தான் தேர்வுகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்தத் தேர்வையும் கூட தேவையா, இல்லையா என்ற முடிவை எடுக்கும்

உரிமை மாநிலங்களுக்கு கட்டாயம் இருக்க வேண்டும். நீட் தேர்வு மருத்துவக் கல்வியில் மாநிலங்களின் உரிமையை பறிக்கிறது. நீட் தேர்வில் NCERT பாடத்திட்டத்திலிருந்துதான் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்தக் கேள்விகளும் மாணவர்களின் புரிதலை, கற்றலை பரிசோதிப்பதற்கு பதிலாக அவர்களின் நினைவாற்றலை, மனனம் செய்யும் திறமையை பரிசோதிப்பதாகவே இருக்கின்றன. இதனால் பயிற்சி மையங்கள் பெருகியுள்ளன.இந்தப் பயிற்சி மையங்களில் சேர்ந்து லட்சக்கணக்கில் பணம் கட்டி , தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் படிக்கும் மாணவர்களே நீட் தேர்வில் தேர்ச்சி அடைய முடிகிறது. எனவே நீட் தேர்வு மருத்துவக் கல்விக்கு எதிரானது மட்டுமின்றி எந்த ஓர் அறிவியல் அடிப்படையும் இல்லாதது.

**நீதிபதி ஏ. கே. ராஜன் குழுவின் ஆய்வு மற்றும் பரிந்துரைகள்**

“மருத்துவக் கல்வியில் மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வின் தாக்கம்” என்று ஆய்வறிக்கையை தமிழக அரசு நியமித்த நீதிபதி ஏ. கே. ராஜன் அவர்கள் குழு 2021 வெளியிட்டது. இந்த ஆய்வின்படி நீட்டிற்கு முந்தைய காலத்தில் 2015-16 ஆம் ஆண்டு அரசு கல்லூரிகளில் இளநிலை மருத்துவ படிப்பிற்கு NCERT (CBSE) பாடத்திட்டத்தில் படித்த மாணவர் ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. நீட் தேர்வினால் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்த மாணவர்களின் எண்ணிக்கை 2020-21 ஆம் கல்வியாண்டில் 26.83 விழுக்காடாக உயர்ந்தது.

நீட் தேர்வு அரசு பள்ளி மாணவர்களுக்கு எதிராக செயல்படுகிறது. அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவ சேர்க்கை, நீட்டிற்கு முன்பு இரண்டு இலக்கத்தில் இருந்தது; அது 2017-18 கல்வியாண்டில் சுழியமாகக் (0%) குறைந்தது. நீட் தேர்வினால் ஆங்கில வழி பயிலும் மாணவர்களின் மருத்துவ சேர்க்கை 13% அதிகரித்தது. தமிழ் மொழி கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 14.44% லிருந்து , நீட்டிற்குப் பிறகு 1.7% ஆகக் குறைந்தது. நீட்டினால் கிராமப்புற மாணவர்களின் மருத்துவ சேர்க்கை 12 விழுக்காடு குறைந்து நகர்புற மாணவர்களின் எண்ணிக்கை 12 விழுக்காடு அதிகரித்துள்ளது. நீட் தேர்வு எழுதிய 99% மாணவர்கள் ஏதோ ஒரு பயிற்சி மையத்தில் சேர்ந்து பயின்றவர்கள். இளநிலை மருத்துவ படிப்பில் சேர்ந்த மாணவர்களில் 71% , ஒரு முறைக்கு மேல் நீட் தேர்வு எழுதியவர்கள்.

நீட் தேர்வினால் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களின் மருத்துவ சேர்க்கை 10 விழுக்காடு குறைந்தது. முதல் தலைமுறை பட்டதாரி அல்லாத மாணவர்கள் எண்ணிக்கை 10 விழுக்காடு அதிகரித்தது.

நீட் தேர்வு நகர்ப்புறங்களில் படிக்கின்ற, ஆங்கில வழி கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு சாதகமாக அதிக வாய்ப்பு அளிப்பதாக உள்ளது. நீட் தேர்வு கிராமப்புற மாணவர்களுக்கும் தமிழ் வழி படிக்கும் மாணவர்களுக்கும்

**எதிராக உள்ளது. ஏழை எளிய முதல் தலைமுறை மாணவர்களை புறக்கணிக்கிறது.**

எனவே இந்த நீட் தேர்வு அடிப்படையில் கல்விக்கு, சமூக நீதிக்கு எதிரானது. எனவே நீட் தேர்வு முற்றிலும் புறக்கணிக்கப்பட வேண்டும்.

மருத்துவக் கல்வியில் பனமைத்துவம் கட்டாயமாக தேவை:

நீட் தேர்வு அறிமுகத்திற்கு பின்பு தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட சமூக பின்னணி கொண்ட, வர்க்கப் பின்னணி கொண்ட ஏழை, எளிய மாணவர்களின் சேர்க்கை, பங்கேற்பு இளங்கலை முதுகலை மருத்துவப் படிப்புகளில் மிகவும் குறைந்து விட்டது. தமிழகத்தில் செய்யப்பட்ட ஆய்வின்படி, தாய்மொழிக் கல்வியில் பயிலும் மாணவர்களும், கிராமப்புற மாணவர்களும், அரசு பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களும், மருத்துவப் படிப்பில் சேரும் முதல் தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களும், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களும் மருத்துவ படிப்புகளில் சேராமல் தடுக்கும் ஆயுதமாகவே நீட் தேர்வு உள்ளது.

**தமிழ்நாட்டின் சிறந்த மருத்துவ கட்டமைப்பை அழித்தொழிக்கும், நீட் வேண்டாம்!**

மருத்துவப் பணி மனிதர்களை மய்யப்படுத்தியது. எனவே அனைத்துத் தரப்பு மக்களின் பங்கேற்பும், பங்களிப்பும் இருந்தால் மட்டுமே அந்தந்த தரப்பு மக்களுக்கு மருத்துவ சேவையை சரியாக கொண்டு சேர்க்க முடியும். சமூகத்தில் நிலவும் பன்மயம் மருத்துவக் கல்வியிலும் பிரதிபலிக்க வேண்டும்; இடம்பெற வேண்டும் . இதுவே சமூக நீதி. கிராமப்புற மாணவர்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த மாணவர்கள், சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த மாணவர்கள் போன்ற அனைத்து தரப்பு மாணவர்களுக்கும் அவரவர் மக்கள் தொகைக்கு ஏற்ப மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். நீட் தேர்வு வருவதற்கு முன்பு இருந்த இத்தகைய நடைமுறை மருத்துவ கல்வியையும் மருத்துவப் பணியையும் சிறப்பாக செயல்பட உதவியது. தமிழ்நாட்டில் இன்று வரை நிலவும் சிறந்த மருத்துவ கட்டமைப்பை அழித்தொழிக்கும், நீட் தேர்வுமுறை வேண்டாம்.



# பாசிச எழுச்சியை தடுத்து நிறுத்திய பிரான்ஸ் மக்கள்!

**திபங்கர்**

2024 ஏப்ரல் - மே மாதங்கள் இந்தியாவிற்கு சோதனைக் காலமாக அமைந்திருந்தது. அதனை இந்த உலகம் கவனித்துக் கொண்டிருந்தது. ஜூன் 4 இல் பாஜக என்ற 'மாபெரும்' சக்தி, 240 என்ற எண்ணிக்கையோடு தடுத்து நிறுத்தப்பட்டது. உலகம் முழுவதுமுள்ள ஜனநாயக நேசர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். ஆனால் பாசிச சக்திகளை ஓரளவுக்கேனும் பின்னுக்குத் தள்ளுவதில் இந்தியா வெற்றி பெற்று விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல்களில், அதிதீவிர வலதுசாரிகள் அடுத்தடுத்த நாடுகளில், பெரும் வெற்றி பெற்றனர். அந்நிய நாட்டவர் மீது வெறுப்பை உமிழ்ந்தனர். ஜெர்மனியின் ஏஎஃப்டி, பிரான்சின் ஆர்என் கட்சி, ஆட்சியிலிருக்கும் 'பிரதர்ஸ் ஆஃப் இட்டலி' (இத்தாலியின் சகோதரர்கள்), மற்றும் அது போன்ற அதிதீவிர வலதுசாரி கட்சிகள் ஜூன் மாத தொடக்கத்தில் நடைபெற்ற ஐரோப்பிய தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்றன. பிரான்சின் மையவாத இமானுவேல் மேக்ரான் ஆட்சி இந்த அதிதீவிர தேசியவாத, அதிதீவிர வலதுசாரிகளின் எழுச்சியை கவனத்தில் கொண்டது. ஜூன் 30, ஜூலை 7இல் திடீர் தேர்தல் நடத்த உத்தரவிட்டது. ஜூன் 4 இல் பிரிட்டன் தேர்தல்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டு தேர்தல்களின் கதைகளில் வெளிப்படும் சங்கேத மொழியை புரிந்து கொள்ள ஒட்டுமொத்த உலகமும் பரபரப்பாக உள்ளது.

பிரான்சின் தேர்தல் முறைப்படி, ஒரு வேட்பாளர் ஒரு தொகுதியில் 50% க்கும் அதிகமான வாக்குகளை பெற்றால் மட்டுமே வெற்றி பெற முடியும். எனவே, தேர்தல்கள் இரண்டு சுற்றுகளாக நடைபெறுகின்றன. ஜூன் 30 அன்று நடைபெற்ற முதல் சுற்று தேர்தல்களில், பாசிச ஆர்என் கட்சி, 76 தொகுதிகளில் 38 தொகுதிகளை வென்று முன்னிலை பெற்றது (மொத்தமுள்ள 577 இடங்களில் மீதமுள்ள 501 இடங்களுக்கு இரண்டாவது சுற்றில் தேர்தல்கள் நடைபெற்றன). நியூ பாப்புலர் ஃபிரண்ட் (என்எஃப்பி) என்ற பதாகையின் கீழ் ஒன்றுபட்டு போட்டியிட்ட இடதுசாரிகள் இரண்டாம் இடத்தை பிடித்தனர். ஆட்சியிலிருக்கும் மையவாத என்செம்பில் கூட்டணி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. இரண்டாம் சுற்றில், மாபெரும் எச்சரிக்கையுணர்வையும், செயல்தந்திர நெளிவுசுழிவையும், அரசியல் முதிர்ச்சியையும் வெளிப்படுத்திய என்எஃப்பி கூட்டணி, பாசிச எதிர்ப்பு வாக்குகளில் எவ்வித பிளவையும் தவிர்க்க என்செம்பில் கூட்டணியுடன் ஒரு தேர்தல் உடன்படிக்கையை எட்டியது. இந்த பாசிச எதிர்ப்பு தேர்தல் ஒருங்கிணைப்பை எளிதாக்கிட, சுமார் 130 என்எஃப்பி வேட்பாளர்களும் 82 என்செம்பில் வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டனர்.

ஒரு தொங்கு நாடாளுமன்றத்தில் 188 இடங்களுடன் என்எஃப்பி மிகப்பெரிய கூட்டணியாக எழுந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக மையவாத என்செம்பில் கூட்டணி 161 இடங்களை கைப்பற்றியுள்ளது. பாசிச ஆர்என் கட்சி 142 இடங்களுடன் மூன்றாவது இடத்தை பெற்றிருக்கிறது. எனினும் பிரான்ஸ் முழுமையாக பாசிசத்தால் கைப்பற்றப்படும் அச்சுறுத்தலில் இருந்து தற்காலிகமாக மட்டுமே தடுத்து நிறுத்தபட்டுள்ளது. இளம் ஆர்என் கட்சித் தலைமையைப் பொறுத்தவரையில் (கட்சித் தலைவர் ஜோர்தான் பார்டெல்லா இன்னும் 30 வயதை எட்டவில்லை; அதேவேளையில் கட்சியினுடைய அதிபர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள மெரைன் லே பென் வயது 50), இந்தத் தோல்வி, அவர்களது வெற்றியை தற்காலிகமாக தடுத்துள்ள நிகழ்வு மட்டுமே. பிரான்சில் மையவாத - இடதுசாரி கூட்டணிகளின் வரலாற்றைப் பார்த்தால், அது நீடித்திருக்கக் கூடிய கூட்டணியாக இதுவரை இருந்ததில்லை. தொங்கு நாடாளுமன்ற சூழ்நிலையை என்எஃப்பி கூட்டணியும் என்செம்பில் கூட்டணியும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பிரான்சிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக பிரிட்டன் தேர்தல் முடிவுகள் வந்துள்ளன. 14 ஆண்டுகள் நீடித்த கன்சர்வேட்டிவ் கட்சியின், நீண்டகால, பேரழிவுமிக்க அரசாட்சி, ஒரு

முடிவுக்கு வந்துள்ளது. தொழிலாளர் கட்சி மீண்டும் அதிகாரத்திற்கு வந்துள்ளது. ஆனால் பிரான்சை போலவே, அண்டை நாடான பிரிட்டனையும் அதிதீவிர வலதுசாரி மீட்சி எனும் சவால் பிடித்தாட்டுகிறது.

வாக்குகளின் அடிப்படையில் பார்த்தால் தொழிலாளர் கட்சி கடந்த 2017, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களோடு ஒப்பிடும்போது இந்தமுறை குறைவான வாக்குகளையே பெற்றுள்ளது. இருப்பினும் 650 இடங்கள் கொண்ட அவையில் 400 இடங்களுக்கும் மேல் வெற்றி பெற்றுள்ளது. இதற்கான முக்கிய காரணம் கன்சர்வேட்டிவ் வாக்கின் பங்குகளில் ஏற்பட்ட மாபெரும் சரிவாகும். தீவிர வலதுசாரி சீர்திருத்தக் கட்சியினுடைய வாக்கின் பங்கு கிட்டத்தட்ட கன்சர்வேடிவ் கட்சியின் வாக்கு அளவுக்கு அதிகரித்துள்ளதும் ஆகும். ஆனால் கெய்ர் ஸ்டார்மர்-இன் தற்போதைய தலைமையின் கீழ் தொழிலாளர் கட்சியும் கூட வலதுசாரி கொள்கைகளைநோக்கிவெளிப்படையாகத்திரும்பி வருகிறது. அது பொருளாதார கொள்கைகளில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்தோருக்கு எதிரான வாய்ச்சவடால்களை ஏற்றுக் கொள்வதிலும், காசாவின் மீது இஸ்ரேலின் போருக்கு ஆதரவளிப்பதிலும், நிரந்தர போர் நிறுத்தத்திற்கான உலகளாவிய அழைப்பினை ஆதரிக்க மறுப்பதிலும் வலதுசாரி கொள்கைகளை நோக்கி திரும்புகிறது. எனவே தொழிலாளர் கட்சியின் இடதுசாரி வாக்காளர்கள் பல்வேறு இடங்களில், சுதந்திர இடதுகள், பாலஸ்தீன ஆதரவு வேட்பாளர்கள், பசுமை கட்சியின் வேட்பாளர்கள் போன்றோருக்கு வாக்களித்துள்ளனர். இதற்கு மாறாக பிரான்சின் என்எஃப்பி கூட்டணி, பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளிலும், சர்வதேச வெளியுறவு கொள்கைகளிலும், குறிப்பாக காசா, பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தும் போரின் பின்னணியில், இடதுசாரி நிகழ்ச்சி நிரலை உயர்த்தி பிடித்துள்ளது. இரண்டு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலமும் இரண்டாம் உலகப்போரும், போரினால் ஏற்பட்ட பெரும்நாசத்தைக் கண்டன. பாசிசத்தின் விஷம் தோய்ந்த வன்முறையால் விளைந்த பேரழிவு, ஐரோப்பா முழுவதும் பெருந்துயரத்தையும் பேரழிவையும் உருவாக்கின. இந்த பாசிசப் பேரழிவை முடிவுக்கு கொண்டு வர ஐரோப்பாவும் ஒட்டுமொத்த உலகமும் எண்ணிலடங்காத மனித உயிர்களை பலியாக கொடுக்க வேண்டியதாயிற்று. 60 லட்சம் உயிர்களை காவு வாங்கிய, ஒட்டுமொத்த யூத சமூகத்தினரையும் கொன்றொழிப்பதாக அச்சுறுத்திய இந்தப் பேரழிவின் காயங்கள், யூத எதிர்ப்பு பாசிச ஆபத்தை கண்டு ஒட்டு மொத்த உலகமும் விழித்தெழ செய்தது. ஆனால் கோவிட் பெருந்தொற்று, உக்ரைன் மீதான போர், பருவநிலை நெருக்கடி, அதிகரித்துக் கொண்டே போகும் வாழ்க்கை செலவு ஆகியவற்றால் விளைந்த பெரும் நாசம், அதனால் தூண்டப்பட்ட முதலாளித்துவ தீவிர நெருக்கடி ஆகியன பாசிச அரசியல் மீண்டும் ஒருமுறை மேலெழுந்து வருவதற்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. ஐரோப்பாவில் புதிய பாசிசத்தின் புதுப்பிக்கப்பட்ட எழுச்சி அதைத்தான் வெளிப்படுத்துகிறது. அது இந்தமுறை தீவிர இனவெறிவாதம், இஸ்லாமிய வெறுப்பு, புலம் பெயர்ந்தோருக்கு எதிரான வெறுப்பு ஆகியவற்றின் மீது கட்டி எழுப்பப்படுகிறது. மைய நீரோட்ட வலதுசாரி கட்சிகளால் ஊக்குவிக்கப்படுகிறது.

பாலஸ்தீனியர்களின் விடுதலை வேட்கையை ஒடுக்குவதற்கான சாக்குபோக்காக இஸ்ரேல் தற்போது யூத எதிர்ப்பை பயன்படுத்துவது வரலாற்றின் விந்தைமுரணாக இருக்கிறது. பாலஸ்தீனியர்களின் நோக்கத்திற்கு ஆதரவளிக்கும் உலகளாவிய ஒருமைப்பாட்டை மௌனமாக்க அது முயற்சிக்கிறது. மத்திய கிழக்கிலும் அதனைத் தாண்டியும் ஏகாதிபத்திய கொள்ளைக்கு ஒரு அரணாகத் திகழும் இஸ்ரேலுக்கு, பாலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமிப்பு செய்வதற்கு மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவி செய்கின்றன. பாலஸ்தீனத்திற்காக ஒருமைப்பாடு தெரிவிப்பவர்கள் மீதும் மேற்கத்திய நாடுகளின் அடக்குமுறை ஏவப்படுகிறது. இஸ்லாமிய வெறுப்பு கருத்தியலை தமக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். இஸ்ரேல் தனது பாசிச பயணத்திற்கு, யூத எதிர்ப்புக்கு எதிரான பொதுமக்களின் கோபத்தை ஒரு கவசமாக பயன்படுத்துகிறது, நியாயப்படுத்தப்படுகிறது. ஜனநாயகத்தின் மீதான, அதன் அரசமைப்பு அடிப்படையின் மீதான தாக்குதலை நியாயப்படுத்திட, 'காலனிமயமகற்றுதல்' என்பதை ஒரு கவசமாக பயன்படுத்துகிறது மோடி ஆட்சி. மோடி ஆட்சியின் பாசிச செயல்திட்டத்தை, அதன் தாக்குதலை எதிர்த்து எழுப்பப்படும் ஒவ்வொரு விமர்சனத்தின் மீதும் 'இந்து வெறுப்பு', தேச விரோத குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறது. அது போலவேதான் இஸ்ரேலும் செய்கிறது. ஜனநாயகம், அரசமைப்புச் சட்டம், இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் காலனிய எதிர்ப்பு பாரம்பரியம், ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியம் ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதன் மூலமாகவும், சமத்துவமான, சமூக - பொருளாதார அமைப்புக்கான மக்களின் வேட்கை மூலமாகவும், இந்தியாவில் பாசிசத் தாக்குதலை நாம் தடுக்க முயற்சிக்கிறோம். அதுபோலவே ஐரோப்பிய இடதுசாரிகளும் பாசிசத்திற்கு எதிரான தமது வரலாற்று பாத்திரத்தை புதுப்பித்து வருகின்றனர். பல்லாண்டுகளுக்கு முன்பு, 1789இல், சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவத்துக்கான உரத்த குரலை எழுப்பிய பிரான்ஸ், 1871 இல் வரலாற்று சிறப்புமிக்க பாரிஸ் கம்யூன் வாயிலாக சோசலிசம் முதன்முதலாக தோன்றிய நிலமான பிரான்ஸ், இடதுசாரிகள் தலைமை ஏற்று நடத்தும் பாசிச எதிர்ப்பு போராட்டத்தின் முதன்மை அரங்கமாக மீண்டும் ஒருமுறை எழுந்து வருகிறது.

# பெருந்துறை சிப்காட்டால் பாதிக்கப்படும், நீர் நிலம் மண் – மக்கள் மீதான தாக்குதல் முறியடிக்கப்பட வேண்டும்!

**சந்திரமோகன்**

பெருந்துறை சிப்காட் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் மாசடைந்த கழிவு /கசிவு நீரால் ஓடைக் காட்டூர், புஞ்சை பாலதொழுவு குளங்கள் மாசடைந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாயம், குடிநீர் ஆதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் வெளியேற்றும் மாசடைந்த நீரை சுத்திகரித்து வழங்கிட, கடந்த 2023 நவம்பரில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட ரூ.40- கோடி மதிப்புள்ள பொது சுத்திகரிப்பு நிலையப் பணிகள் இதுவரை தொடங்கப்படாமல் உள்ளன.

மற்றொருபுறம், சிப்காட் வளாகத்தில் 60,000 டன்னுக்கும் அதிகமான கலப்பு உப்புகள் (Mixed Salt) அகற்றப்படாமல் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

கடந்த 2018 ஜுன் மாதத்தில் பெருந்துறை சிப்காட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் துவக்கிய போராட்டத்தை தொடர்ந்து, அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தி, விளைவாக, கடந்த 2018 ஜுலை மாதம் முதல் மாசு தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் பற்றிய மாதாந்திர ஆய்வுக் கூட்டங்கள் வட்டாட்சியர் மூலமாகவும், பிறகு, 2022 ஏப்ரல் முதல் பெருந்துறை - மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தில் மாதந்தோறும் 5-ஆம் தேதி நேரடி கலந்தாய்வு அமர்வு கூட்டங்கள் மூலமாகவும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இதனால், பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் பங்கேற்று குரல் எழுப்பியதால், ஓரளவுக்காவது மாசு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு புதியதாக பொறுப்பேற்ற மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், சிப்காட் தொழிற்சாலை முதலாளிகளின் கையாட்களை திட்டமிட்டு நேரடி கலந்தாய்வு கூட்டத்திற்கு அழைத்து வரச் செய்து மோதலை உருவாக்க, கலவரத்தை தூண்ட முயற்சித்தார்; மாதந்தோறும் நடைபெற்ற நேரடி கலந்தாய்வு அமர்வு கூட்டத்தை நடத்த மறுத்தார். கூட்டங்கள் நடைபெற்ற இதுவரை, ஐந்தாண்டு காலமாக, அதிகாரிகள் மாசு தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருந்தது. ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நேரடி கலந்தாய்வு கூட்டங்கள் இல்லை என்றால் நிலைமை மோசமாகும் என்பதால், நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட மக்கள் கடந்த 5-7-2024 ல் அமைதியாகப் போராடினார்கள்.

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக, மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில், பெருந்துறை காவல் துறையினர் 6 பெண்கள் உட்பட 42 விவசாயிகளை அராஜகமான



முறையில் கைது செய்தனர். ஒன்றிய மோடி அரசால் அறிவிக்கப்பட்ட புதிய குற்றவியல் சட்டமான பாரதிய நியாய சன்ஹிதா (BNS), 2023 சட்டத்தின் கீழ், ஜாமீனில் வரமுடியாத பிரிவுகள் மற்றும் பத்தாண்டுகள் வரை தண்டனை வழங்கக்கூடிய சட்டப் பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மாசு கட்டுப்பாடு வாரியத்தைக் கண்டித்தும், பொய் வழக்குகளை ரத்து செய்ய வலியுறுத்தியும், நேரடி கலந்தாய்வு அமர்வு கூட்டங்களை வழக்கமான முறையில் கூட்ட அரங்கில் தொடர்ந்து நடத்திட வலியுறுத்தியும், சிப்காட் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மாசுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவும், விரிவான இயக்கத்தை மேற்கொள்ள, பெருந்துறை மற்றும் சென்னிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த பொதுமக்களை ஒருங்கிணைத்து போராட்டத்தை வலுப்படுத்திட, ‘பெருந்துறை சிப்காட் மாசு தடுப்பு போராட்ட ஒருங்கிணைப்புக்குழு‘ உருவாக்கப்பட்டுள்ளது. போராட்டம் தீவிரமாகிறது. பெருந்துறை சிப்காட்டால் பாதிக்கப்படும், மக்களின் நீதிக்கானப் போராட்டம் வெல்லட்டும்!

தமிழ்நாடு அரசே!

பொய்வழக்குகளைத் திரும்பப் பெறுக!

பெருந்துறை சிப்காட் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்க !

# தூத்துக்குடி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

தமிழகத்தின் அனைத்து உள்ளாட்சி நிர்வாகங்களும் (மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி) தூய்மைப் பணியை ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சியில் Our land என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் (Contract) வழங்கப்பட்டிருக்கிறது. Our land சொல்கிறது "Greening your life" என்று. இதற்கு தமிழில் உங்கள் "வாழ்க்கையை வளமாக்குகிறோம். செழுமையாக்குகிறோம் " என்று பொருள். ஆனால், இவர்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கையை அழித்துக் கொண்டு இருக்கிறார்கள். சொல்வது ஒன்று செய்வது ஒன்று.

தமிழக அரசின் ஆணை (GO 62/2017) சொல்கிறது. ஓட்டுநர்களுக்கு 763₹ம் தூய்மைப் பணியாளர்களுக்கு 725₹ம் ஒரு நாளுக்கு கொடுக்க வேண்டும் என்று. மாவட்ட ஆட்சியர் ஒருபுறம் குறைந்த பட்சக் கூலி அறிவித்து இருக்கிறார். ஆனால் இந்த இரண்டு ஆணைகளையும் காற்றில் பறக்க விட்டு அடிமாட்டு விலையில் சம்பளம் வழங்குகிறது.

வார விடுமுறை கிடையாது. ஒரு நாளைக்கு 1 டன் குப்பை கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வேறு. PF, ESI எண்கள் தொழிலாளர்களிடம் கொடுக்கப்படுவதில்லை. சம்பள ரசீது கொடுப்பதில்லை . கேட்டால் மேற்பார்வையாளர்கள் திமிராகப் பேசுவார்கள்.

உழைப்புச்சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் அனுபவித்த தொழிலாளர்கள் தங்களுக்கு விடிவுகாலம் வராதா? என்று ஏங்கும் போது AICCTU அறிமுகம் கிடைத்தது. AICCTUல் சேர்ந்தார்கள். தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைக்கு பல மனுக்கள் நிர்வாகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அனைத்து மனுக்களும் அவர்கள் தினசரி கேட்கும் 1 டன் குப்பையில் கணக்குக் காண்பிப்பதற்கு பயன்பட்டிருக்கலாம். தூய்மைப் பணியாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை.

தூய்மைப் பணியாளர்களின் பிரச்சனைகளை விவாதிப்பதற்கு 27 எப்ரல் 2024 பொதுக்குழு நடத்தப்பட்டது. நிர்வாகத்தின் மிரட்டலையும் மீறி 500க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். 27 ஜுன் 2024 பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஜுன் 26 நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. AICCTU மாநிலத் தலைவர் தோழர். சங்கரபாண்டியன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தொழிலாளர்களின் கோரிக்கையை முன் வைத்தார். துணை ஆணையர் பல கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு ஆர்ப்பாட்டத்தை ரத்து செய்ய வேண்டுகோள் விடுத்தார். நாமும் உடன்பட்டோம்.

ஜூலை 5 நிர்வாகம் ஏற்றுக் கொண்ட முக்கியமான கோரிக்கைகளைக் கூட நடைமுறைப்படுத்தவில்லை என்பதை தெரிந்து கொண்ட தொழிலாளர்கள் ஆவேசமடைந்தனர். ஜூலை 6 சிறப்பு நிர்வாகக் கூட்டம் கூட்டப்பட்டு ஜூலை 8 உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

ஜூலை 8 தொழிலாளர்கள் வரும் முன்பே மாநகராட்சியின் இரு வாசல்களும் பூட்டப்பட்டது. ஏராளமான காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். காலை 6 மணிக்கு மேல் 4 மண்டலங்களிலிருந்தும் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மாநகராட்சி முன் திரண்டனர். 8 மணிக்கு மாநகராட்சி மேயர் திரு.ஜெகன் தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்வதற்கு ஒத்துக் கொண்டதோடு, ஆணையரோடு 11 மணிக்கு பேசுவதற்கு ஏற்பாடும் செய்தார். தோழர்கள் சகாயம், சிவராமன், பொன்ராஜ், முத்துலட்சுமி ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

அடுத்த நாளே சம்பள ரசீது கொடுக்கப்பட்டது. காரணமில்லாமல் பிடிக்கப்பட்ட ₹50 திருப்பிக் கொடுக்கப்பட்டது.

AICCTU தொழிற்சங்கத்தின் சரியான வழிகாட்டலையும் தொழிலாளர்கள் ஒற்றுமையின் அவசியத்தையும் தொழிலாளர்கள் உணரத் தொடங்கி உள்ளனர்.

தொழிலாளர்களின் போராட்டத்தின் சில பலன்கள் இப்போது கிடைத்துள்ளது. மகிழ்ச்சியானதுதான். ஆனால் முழுமையாகக் கிடைக்க தனியார் மயத்தை ஒப்பந்த முறையை ஒழிக்க வேண்டும் அல்லவா?

## 'அரசமைப்புச் சட்டம் கொலை': தற்கால குற்றங்களை தடுத்துக்கொள்ள பாஜக பயன்படுத்தும் கேடயம்!

அரசமைப்புச் சட்டம் பிரிவு 352 அய் பயன்படுத்தி, 1975 ல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது 'அரசமைப்புச் சட்டக் கொலை' என பாஜக கூறுமானால் அந்தப் பிரிவையும், உபா போன்ற மிகக் கொடிய சட்டங்களையும், போலீசுக்கு தன்னிச்சையான அதிகாரத்தை வழங்கும் புதிய தண்டனைச் சட்டப்பிரிவுகளையும் நீக்கியாக வேண்டும். 1975 ன் அவசரநிலை பிரகடனத்துக்காக இந்திய மக்கள் காங்கிரசை 1977ல் தண்டித்தனர். இன்று பாஜக அரசமைப்புச் சட்டத்தின் மீது இடைவிடாத தாக்குதலை நடத்தும் குற்றத்தை செய்து வருகிறது. அதன் தற்கால குற்றங்களுக்கான கேடயமாக கடந்த காலங்களைப்பற்றி பேசி தப்பித்துக் கொள்வதை மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

-திபங்கர்

# ஏஐசிசிடியு தமிழ்நாடு பொதுக்குழுக் கூட்டம்

ஜூலை 13 , 14 -2024 தேதிகளில் தென்காசியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன் தலைமை தாங்கினார். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி கூட்டம் ஆரம்பமானது. ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் வீ.சங்கர் துவக்கவுரையாற்றினார். முதலாவதாக ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் ஜி.ரமேஷ், 'தொழிலாளர் வகைகளும் சந்திக்கும் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் பேசினார். தொடர்ந்து ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விவாதங்கள் நடத்தப்பட்டன. ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் த.சங்கரபாண்டியன், 'தொழிலாளர் வர்க்கத்தை அரசியல்படுத்துதல்' தாளை முன்வைத்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, தமிழ்நாட்டில் என்ன செய்யப்பட வேண்டும் என்பது பற்றி உரையாற்றினார். வேல்முருகன் தீர்மானங்களை முன்வைத்தார்

மோடி அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரை ஏஐசிசிடியு அறைகூவல் விடுத்துள்ள பிரச்சார இயக்கத்தை வெற்றி பெறச் செய்ய பொதுக்குழு தீர்மானித்தது.

மூன்று புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தி ஜூலை 24 அன்று நடைபெறும் அனைத்து தொழிற் சங்கங்களின் போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய ஏஐசிசிடியு மாநிலப் பொதுக் குழு அறை கூவல் விடுக்கிறது. உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



## "தோழர்" என்ற சொல் அறிமுகம்

மேல்நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பிய தந்தை பெரியார் அவர்கள் 13-11-1932 ''குடி அரசு'' இதழில் ஈ. வெ. ரா. குறிப்பு என்ற தலைப்பில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்கள்.

''இயக்கத் தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதிலும் பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக தோழர் என்கிற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ள-ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீமத் என்பது போன்ற வார்த்தைகளை சேர்த்துப் பேசவோ எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். ''குடி அரசி''லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்''. —ஈ. வெ. ரா.







**புதிய சட்டத் தொகுப்புக்கு எதிரான வழக்கறிஞர்கள் போராட்டம்**



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.07.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023









Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh